உ
சிவமயம்


# சைவநீதி

# SAIVANEETHI

| மலர் 9 | பார்த்திப - ஐப்பசி | October - November 2005 | இதழ் 7 |
|---|---|---|---|




உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

கந்தரனுபூதி

ரூபா 25/=

உ

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நலம் தரும் பதிகங்கள் | 2 |
| 2. | கந்தபுராண தேம்பிழி | 3 |
| 3. | எனது வாழ்க்கையில் சாதுக்கள் தரிசனம் | 7 |
| 4. | விவேக சிந்தாமணியிற் பெண்கள் | 9 |
| 5. | கோபுர மகிமை | 13 |
| 6. | அங்குலச் சுருக்கம் | 15 |
| 7. | திருவாசகத்தில் சைவ சித்தாந்தம் | 17 |
| 8. | கன்மம் | 20 |
| 9. | கார்த்திகைக் கார்த்திகையில் அண்ணாமலைக் குன்றின் மேல் தோன்றுகின்ற ஒளிப்பிழம்பைக் காணக் கண்கள் கோடி வேண்டும் | 22 |
| 10. | சைவபூஷணம் | 24 |
| 11. | சைவ ஞானிகளான சந்தான குரவர் | 25 |
| 12. | சந்தேகம் தெளிதல் | 28 |


சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். - இதழ் நிர்வாகிகள்

உ
சிவமயம்

'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'

# சைவநீதி





மலர் 9 பார்த்திப - ஐப்பசி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 07



**தொடக்குனர்:**

கலாபூக்ஷணம், ஞானசிரோமணி, சைவப்புலவர்மணி, வித்துவான்,

**திரு. வ. செல்லையா**

**மதியுரைஞர்:**

**சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்**

**திரு. D.M. சுவாமிநாதன்**
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

**திரு. அ. கந்தசாமி**
*Chairman U.P.S.*

**திரு. கு. மகாலிங்கம்**

**பதிப்பாசிரியர்:**

**திரு. வே. திருநீலகண்டன்**
லக்ஷமி அச்சகம்

**விநியோகம்:**

**திரு. க. சீனிவாசகம்**
ஓய்வு பெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

**நிர்வாக ஆசிரியர்:**

**திரு. செ. நவநீதகுமார்**
30, ரம்யா றோட், கொழும்பு - 04.

தொடர்புகட்கு : *7.30 p.m. to 7.30 a.m.*
தொலைபேசி : 2580458


## கோள் என் செயும்

நாளும், கோளும் நலிவை ஏற்படுத்துமா? நாள் என்பது அச்சுவினி முதல் ரேவதி ஈறாகவுள்ள இருபத்தேழு நட்சத்திரம்.

கோள் என்பது சூரியன் முதலான ஒன்பது கிரகங்கள். கிரகங்களின் சுழற்சியால் பருவ மாறுபாடு ஏற்படுகிறது. இயற்கையில் சில மாற்றம் நடைபெறுகிறது. பூரணை அமாவாசைத் தினங்களில் கடல் பொங்குகிறது. இது தனி மனித வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்துமா? இவற்றிலே இருந்து விடுபட நவகோள் வழிபாடு பயன் தருமா?

கோள்களின் மாற்றங்களினால் அல்லது பெயர்ச்சியினால் மனித வாழ்விலும் மாற்றம் ஏற்படலாம். இவற்றையெல்லாம் தடுத்து நிறுத்தக்கூடிய அல்லது மாற்றி அமைக்கக்கூடிய சக்தி இறைவனுக்குத்தான் உண்டு. கோள்கள் யாவும் இறைவன் ஆணைக்குட்பட்டுத்தான் செயற்படும் ஆற்றல் கொண்டவை.

முருகப் பெருமானை வழிபட்டால் நாளும் கோளும் எம்மை வந்து நலிவடையச் செய்யா. நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் வினை கூட நம்மை வருத்தாது. முருகப் பெருமானுடைய தாள் 2, சிலம்பு 2, சதங்கை 2, தண்டை 2, சண்முகம் 6, தோள் 12, கடம்பு ஆக இருபத்தேழும் எனக்கு முன் தோன்றினால் இருபத்தேழு நாட்களும் (நட்சத்திரம்) தீங்கில்லை.

**நாள் என்செயும் வினைதான் என்செயும் எனை நாடி வந்த**
**கோள் என்செயும் கொடுங் கூற்றென் செயும் குமரேசர்இரு**
**தாளும் சிலம்பும் சதங்கையும் தண்டையும் சண்முகமும்**
**தோளும் கடம்பும் எனக்குமுன் னேவந்து தோன்றிடினே.**

முருகனைச் சரணடைந்தால் எமக்கு எந்தக் குறையுமில்லாது அந்தக் கந்தக் கடவுள் காத்துக் கொள்வான். கார்மயில் வாகனனைச் சாந்துணைப் போதும் மறவாதவற் கொரு தாழ் வில்லையே.

# நலம் தரும் பதிகங்கள்

## பதிகம் 5

### பிரசவம் இனிதே நடைபெற உதவும் பதிகம்

காவிரி ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள சிவத்தலம் திருச்சிராப்பள்ளி ஆகும். இத்தலத்து சுவாமிக்குத் ''தாயுமானார்'' என்று பெயர். கோயில் மலைமேல் உள்ளது. இது 'தட்சண கைலாயம்' எனப்படும். சுவாமியிடம் மிகுந்த அன்புடைய மாது ஒருவர் காவிரியின் வடகரையில் வாழ்ந்து வந்தாள். இவளுடைய பிரசவ காலத்தில் காவிரி பெருகியதால், தாய், தந்தையர் உதவ முடியவில்லை. அச்சமயத்தில் சுவாமியை வேண்ட, அவர் அவளுடைய தாயின் வடிவில் வந்து மருத்துவம் செய்து, பிரசவம் இனிதே நடைபெற அருளினார். இத் தலத்து இறைவனை வழிபட்டு சம்பந்தரால் பாடப்பெற்ற இப் பதிகத்தை ஓதினால் பிரசவத்தில் எந்த சங்கடமும் ஏற்படாது இனிதே முடியும் என்பது பல பெரியவர்கள் அனுபவித்த உண்மையாகும்.

திருச்சிற்றம்பலம்

**திருச்சிராப்பள்ளி** — **பண்: குறிஞ்சி**

நன்றுடையானைத் தீயதிலானை நரை வெள்ளேறு
ஒன்றுடையானை உமையொரு பாகம் உடையானைச்
சென்றடையாத திருவுடையானைச் சிராப்பள்ளி
குன்றுடையானைக் கூற என்னுள்ளங் குளிரும்மே. 1

கைம்மகவேந்தி கடுவனொடு ஊடிக்கழைபாய் வான்
செம்முக மந்தி கருவரையேறுஞ் சிராப்பள்ளி
வெம்முகவேழத்து ஈருரி போர்த்த விகிர்தாநீ
பைம்முக நாகம் மதியுடன் வைத்தல் பழியன்றே. 2

மந்தம் முழவம் மழலை ததும்ப வரைநீழல்
செந்தண் புனமுஞ் சுனையுஞ் சூழ்ந்த சிராப்பள்ளிச்
சந்தம் மலர்கள் சடைமேலுடையார் விடையூரும்
எந்தம் அடிகள் அடியார்க்கு அல்லல் இல்லையே. 3

துறை மல்கு சாரற் சுனை மல்கு நீலத்திடை வைகிச்
சிறை மல்கு வண்டுந்தும்பியும் பாடுஞ் சிராப்பள்ளிக்
கறை மல்கு கண்டன் கனலெரியாடுங் கடவுள் எம்
பிறை மல்கு சென்னி யுடையவன் எங்கள் பெருமானே. 4

கொலை வரையாத கொள்கையர் தங்கள் மதில் மூன்றும்
சிலைவரையாகச் செற்றனரேனுஞ் சிராப்பள்ளித்
தலைவரை நாளுந் தலைவரல்லாமையுரைப் பீர்காள்
நிலவரை நீலமுண்டதும் வெள்ளை நிறமாமே. 5

வெய்யதண் சாரல் விரிநிற வேங்கைத் தண்போது
செய்ய பொன் சேருஞ் சிராப்பள்ளி மேய செல்வனார்
தையலோர் பாகம்மகிழ்வர் நஞ்சுண்பர் தலையோட்டில்
ஐயமுங் கொள்வர் ஆரிவர் செய்கை அறிவாரே. 6

வேயுயர் சாரல் கருவிரலூகம் விளையாடும்
சேயுயர் கோயிற் சிராப்பள்ளி மேய செல்வனார்
பேயுயர் கொள்ளி கை விளக்காகப் பெருமானார்
தீயுகந்தாடல் திருக்குறிப்பாயிற் றாகாதே. 7

மலைமல்கு தோளன் வலிகெடவூன்றி மலரோன்தன்
தலைகலனாகப் பலிதிரிந்துண்பர் பழியோரார்
சொலவல வேதஞ் சொலவல கீதஞ் சொல்லுங்கால்
சிலவல போலுஞ் சிராப்பள்ளிச் சேடர் செய்கையே. 8

அரப்பள்ளியானும் மலர் உறைவானும் அறியாமைக்
கரப்புள்ளி நாடிக் கண்டிலரேனுங் கல்சூழ்ந்த
சிரப்பள்ளி மேய வார்சடைச் செல்வர் மனைதோறும்
இரப்புள்ளீர் உம்மை யேதிலர் கண்டால் இகழாரே. 9

நாணாது உடை நீத்தோர்களுங் கஞ்சி நாட்காலை
ஊணாப் பகல் உண்டு ஓதுவார்கள் உரைக்குஞ்சொல்
பேணாது உறுசீர் பெறுதும் என்பீர் எம்பெருமானார்
சேணார் கோயில் சிராப்பள்ளி சென்று சேர்மினே. 10

தேனயம் பாடுஞ் சிராப்பள்ளியானைத் திரை சூழ்ந்த
கானல் சங்கேறுங் கழுமலவூரிற் கவுணியன்
ஞானசம்பந்தன் நலமிகு பாடல் இவைவல்லார்
வானசம்பந்தத் தவரோடு மன்னி வாழ்வாரே. 11

திருச்சிற்றம்பலம்

# கந்தபுராண தேம்பிழி

சிவ. சண்முகவடிவேல்

தக்கன், பிரமதேவர்சிருட்டித்த பத்துப் புதல்வருள் ஒருவன். உமாதேவியார் தற் பெருமை மிக்க தக்கன் பெற்ற ஒப்பற்ற மகள். உமா தேவியார் தக்கனுக்குத் தாம் மகளாகிய குற்றத்தை நீக்க மனங் கொண்டார். கவுரி அம்மையார் இமயமலை அரசனுக்குச் சிறந்த மகளானார். பரமேசுவரன் தம்மை வந்து மணஞ் செய்யும் பொருட்டுப் பார்பவதி அம்மையார் இமயத்தில் தவம் ஆற்றி வைகினார்.

அந்நாளில் சூரபன்மன் சிங்கமுகாசுரன் தாரகாசுரன் என்னும் தம்பியரோடு தரணியில் பிறந்தான். இவர்களுக்குத் தந்தையாவார் காசிப முனிவர். தாயும் மாயை என்பாள். சூரபன்மன் தம்பியரோடு செய்த வீரயாகத்தில் சிவபெருமான் வெளிப்பட்டார். சூரபன்மன் வேண்டிய வரங்களோடு செல்வங்களையும் சிவபிரான் வாரி வழங்கினார். சூரபன்மன் தேவர் அனைவரையும் வெற்றி கொண்டான். அவன் காசினியில் கடலின் நடுவனாக ஒரு வீரநகரைத் தேவ தச்சன் மூலம் உருவாக்கினான். நிகரற்ற அந்நகருக்கு வீர மகேந்திரபுரம் என்னும் ஓர் நாமத்தைச் சூட்டினான். சூரபன்மன் வீரமகேந்திரபுர மாளிகையில் மன்னனாக மணிமுடி சூட்டினான். அவன் சேனைகள் சூடி ஆயிரத்தெட்டு அண்டங்களுக்கு அரசனாக அரசாட்சி ஆற்றி வருவானாயினான்.

சிவபெருமான் அக்காலத்தில் கைலைமலை மேவிய கல்லால மர நிழலில் வீற்றிருந் தருளினார். சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர் என்னும் நான்கு முனிவர்களுக்கு மூவகைப் பதங்களை மொழிந்தார். மூவகைப் பதங்களாவன சரியை, கிரியை, யோகம் என்பன. நல்லதோர் ஞான போதம் இத்திறம் என்று சொற்பதத்தில் அடங்காதாதலின் மோன நிலை உணர்த்தினார். முனிவர்கள் நால்வரும் உணரச் சின்முத்திரையைக் காட்டிச் செயலற்று வீற்றிருந்தருளினார் திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்.

ஆதி கடவுள் ஆலமர் கடவுளாக அமர்ந்திருக்கும் அந்நாளில் சூரபன்மன் முதலாகிய அசுரர்கள் அண்டமெங்கும் பொல்லாங்கு ஆற்றினார்கள். சில தேவரைப் பிடித்துச் சிறையில் அடைத்தார்கள். இந்திரன் முதலாகவுள்ள தேவர்களை ஆற்றொணாத் துயரத்தில் ஆழ்த்தினார்கள். அசுரர்களுடைய வஞ்சனைக்கு அஞ்சி உருக்கரந்தும் மறைவிடம் புக்கும் ஒளித்திருந்தார்கள் இந்திரன் ஆதியோர்.

இடர்களையும் வழியற்ற இந்திரன் சிவபிரான் கொண்ட மோன நிலையைப் பிரம தேவரிடத்தில் மொழிந்தான். பிரமதேவர் சிவபெருமானுடைய மௌன நிலையை மாற்ற மன்மதனைக் கயிலைக்கு அனுப்பி வைத்தார். மன்மதனை மான் கரத்தார் தமது நெற்றிக் கண்ணினால் நீறாக்கினார். பங்கயன் முதலாம் பல தேவர்கள் பரிந்தார்கள். பரமனைப் போற்றுதல் புரிந்தார்கள். அது கண்டு இரங்கிய இறைவன் மோனம் நீங்கினார். இமையவர்களுக்குக் கருணை பொழிந்தார்.

திருநீலகண்டப் பெருமான் ஓரெழு முனிவர் தம்மை இமய ஓங்கல் அரசனிடத்தில் அனுப்பி வைத்தார். மலை அரசனிடத்தில் கவுரி அம்பாளைத் தமக்கு மணம் பேசுவித்தார். தவக் கொழுந்தின் அன்பை உலகவருக்கு உணர்த்தும் பொருட்டாகச் சோதனை புரிவாராகச் சென்றார். அம்பாளை அருமணம் புரியும் பொருட்டு சிவபிரான் சிவகணங்களோடும் இமயம் எழுந்தருளினார்.

சிவசத்தி திருமணத்தைத் தரிசிக்க இமயமலையில் எல்லா உலகத்தவரும் வந்து தொக்கார்கள். பாரம் பெறாது வட திசைப்பூமி தாழ்ந்தது. தென் திசைப்பூமி உயர்ந்தது. பூமியின் ஏற்றத்தாழ்வைச் சமநிலை செய்ய

**அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் வேந்து அவாம்**
**பண்புடைமை தூது உரைப்பான் பண்பு** 681

மக்களிடம் அன்பாயிருத்தலும் அரச காரியங்களுக்கு அமைந்த குடும்பத்தில் பிறந்திருத்தலும் அரசர் விரும்பத்தக்க சிறந்த பண்புகள் உடையவனாக இருத்தலும் தூது சொல்பவனுக்கு இலக்கணங்களாம்.

வல்ல அகத்திய முனிவரைப் பொதிய மலைக்கு ஏகச் செய்தார் எம்பெருமான். இமயத்தில் பார்வதி பரமேஸ்வரன் திருக்கல்யாணம் இனிது நிறைவேறியது. மாய்த்த மன்மதனை மகாதேவர் தோற்றுவித்தருளினார். அனங்கனை அரூபியாக அமரும்படி ஐயன் ஆஞ்ஞாபித்தார்.

பரமேசுவரன் பார்ப்பதி அம்மையாரோடும் மீண்டும் பனி மலைக்குப் படர்ந்தார். ஆலயத்தில் அமைந்த சிம்மாசனத்தில் அம்பிகையோடும் வீற்றிருந்தருளினார். எல்லா உலகங்களிலு முள்ள ஆன்மாக்களுக்கு எல்லாம் சங்கரனார் சுகத்தையும் புணர்ப்பையும் அருளிச் செய்தார். இந்திரன் முதலாம் இமையவர்கள் எல்லாரும் கயிலையைக் காதலித்து வந்தார்கள். அம்மை அப்பரின் அடிகளை அன்போடு ஆராதித்தார்கள். சூரபன்மனால் தாம் படும் சொல்லொணாத துயர்களை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள்.

தேவர்களுடைய துயர் துடைக்க சிவபிரான் தமது நெற்றிக் கண்ணின்றும் சரவணபவனைத் தந்தார்.

சிவபிரான் செவ்வேள் பெருமானுடைய சேனைத் தலைவர்களையும் உதவினார். முதன்மை மிக்க வீரபாகு தேவர் முதலாகிய இலக்கத்தொன்பது பிரதம கணவீரர்களை உமாதேவியாரிடத்திருந்து உதிக்கச் செய்தார்.

பெருமையிற் சிறந்த குழந்தை வடிவேலவர் அளவற்ற திருவிளையாடல்களை ஆற்றினார். பூவுலகத்திலுள்ள கடல்களையும் மலை களையும் வான் உலகங்களையும் நிலை மாறுபடச் செய்தார். இந்திரனாதி தேவர்கள் அனைவரும் அச்செயல்களை அவதானித்துப் பார்த்தார்கள். குழந்தையின் ஆற்றலைக் குறிக் கொள்ளவில்லை. மயில் மேல் அழகரோடு கொடிய போரினைப் புரிந்து நின்றார்கள்.

வெற்றி வேல் போர்க்கொற்றவை சிறுவர் தம்மை எதிர்த்து நின்று கொடும் போர் செய்த தேவர்களைக் கொன்றருளினார். வியாழ பகவான் தேவர்களுடைய செயல் திறமின்மையை முருகப் பெருமானிடம் முறையிட்டார். அமரருடைய அறியாமைக்கு இரங்கிய ஆறுமுகப்பிரான் தேவர்களுடைய உயிரை உதவி எழச் செய்தார். கந்தக் கடவுள் தமது பரமேச்சுவர வடிவத்தைத் தேவர்களுக்குக் காட்டியருளினார். தேவர்கள் கண்டு அறியாத தரிசனத்தைக் கண்ணிருந்தும் காணப் பெறாது தடுமாறினார்கள். கந்தவேள் பெருமான் அருளால் கண்டு தேவர்கள் களிப்படைந்தார்கள். பின்னர் ஆல் கெழு கடவுள் புதல்வர் நாரத முனிவருடைய யாகத்தில் தோற்றிய ஆட்டுக் கடாவை ஊர்தியாகக் கொண்டு ஊர்ந்தருளினார்.

மலைமகள் மகனார் பிரமதேவரிடத்தில் வேதத்தில் முதற் கண்ணதாகிய பிரணவத்தின் பொருளை வினவினார். பிரமதேவர் விடை தெரியாது பிரமித்தார். சிவகுரு நாதர் பிரமதேவரைத் தண்டிக்கச் சிறையில் அடைத்தார். தாமே பிரமதேவருடைய படைப்புத் தொழிலை மேற் கொண்டு எல்லா உலகங்களையும் படைத்தார். சிவபிரான் குறையிரந்து கூறப்பிரமதேவரைச் சிறையினின்றும் நீக்கினார். மயில் மேலழகர் அரிய பிரணவத்தின் அரும் பொருளை அகத்திய முனிவர் அறியும்படி அருளிச் செய்தார்.

சிவபிரான் அந்நாளில் கைலயங்கிரியில் ஆறுமுகப் பிரானை அணைத்துப் பின்வருமாறு அருளிச் செய்தார். 'எவர்களாலும் வெல்லுதற் கரிய சூரபன்மன் முதலாகிய அசுரர்களை வென்றுவா' என விளம்பினார். 'பிரமதேவர் முதலாம் தேவர்களுடைய துன்பங்களைத் துடைத்து வருதிமைந்த' என்று விடை ஈந்தார்.

பராபரன் மைந்தருக்குத் துணைப் படைகளாக இலக்கத்தொன்பது வீரர்களையும் ஈராயிர வெள்ளம் பூதவீரர்களையும் வலிய ஆயுதங்களையும் மனோ வேகப் பொற்றேரையும் உடனாக அனுப்பி வைத்தார். வானோர் தானைத் தலைவர் சேரா சமூகம் தற் சூழ வெள்ளியங்கிரியினின்றும் புவிக்குப் புறப்பட்டார்.

**அன்புஅறிவு ஆராய்ந்த சொல்வன்மை தூதுஉரைப்பார்க்கு**
**இன்றி யமையாத மூன்று** **682**

அரசனிடம் அன்பும் அவனுக்கு ஆவன அறியும் அறிவும், அவற்றை வேற்றரசரிடம் சொல்லும் போது ஆராய்ந்து சொல்லும் நாவன்மையும் தூது சொல்பவர்க்கு இன்றியமையாத மூன்று பண்புகளாம்.

பூவுலகில் கடம்பமர் காளை புகுந்ததும் கிரவுஞ்ச கிரியைத் தாரகாசுரனோடும் வென்றருளினார்.

தேவகிரியில் பங்கயாசனர் முதலாம் தேவர்கள் நூலறி புலவரை வழிபாடு செய்து போற்றினார்கள். தேவர்தங்கிரியில் சிறப்புடன் வீற்றிருந்த வெற்றி வேற் பெம்மான் சிலநாள் செல்லத் தென்திசை நோக்கிச் சென்றார். வழி நடைச் செலவில் முக்கண் மூர்த்தி வீற்றிருக்கும் திருக் கோவில்களில் வழிபாடு செய்தார். குன்றம் எறிந்த குமரவேள் மேன்மை மிக்க திருச்சேய்ஞலூரைச் சென்று சேர்ந்தார். ஆங்கு முழுமுதற் பரம் பொருளுக்குரித்தாகிய சிவபடைக்கலத்தைப் பெற்றருளினார்.

சர்வசங்காரப் படையைப் பெற்ற சரவண பவனை பராசர முனி சிறார்கள் வந்து வணங்கினார்கள். ஆறுமுகப் பிரான் அவர்களுக்குச் சிறந்த அருள் புரிந்தார்.

எல்லோருடனும் எழுந்தருளிய குமரப் பெருமான் திருச்செந்தூரில் வீற்றிருந்தருளினார். முருகப் பெருமான் திருச்செந்தூரில் அமர்ந்திருந்த அந்நாளில், சூரபன்மன் பெற்ற வரங்களையும் வளங்களையும் சிறப்புக்களையும், இந்திரனுடைய இன்னல் களையும் வியாழ பகவான் மூலம் வினவி அறிந்து கொண்டார்.

சூரபன்மனுடன் சமரைத் தொடங்குவதற்கு முன்னர் தரும நெறியைச் சிந்தித்தார் சண்முகப் பெருமான். குன்றம் பிளந்த குமாரப் பெருமான் வீரவாகு தேவரை வீரமகேந்திர புரத்திற்குச் சூரபன்மனிடத்தில் தூது விடுத்தார்

பன்னிரு புயத்தோன் பகைவனுடைய மனக் கருத்தை ஓர்ந்து கொண்டார். சூரபன்மன் தேவர் சிறை விடுப்ப மறுத்தலினால் வெற்றி வேற் பெருமான் சேனை சூழத் திருச்செந்தூரினின்றும் புறப்பட்டார். வீரமகேந்திரத்தை அண்மித்தார். பக்கலாகப் பாடி வீட்டைப் படைப்பித்தார். ஆங்கு சேனையும் தாமும் சிறப்புடன் வைகினார்.

சேவற் கொடியோன் தமது புறத்துள சேனையோரால் சூரபன்மனுடைய கிளையைப் பொன்றுவித்தார். மாயோன் மருகன் சிங்கமுகா சூரன் என்னும் வீரனை வென்றருளினார். அவனுடைய மாயங்களையும் வளங்களையும் சிறப்புக்களையும் வரங்களையும் ஏனையவற் றையும் மாய்வித்தார். ஆயிரத்தெட்டு அண்டங் களுக்கு அரசனான சூரபன்மனை விரைவில் வேற்படையினால் இரு பிளவாக்கி நின்றருளினார்.

இரு பிளவாக்கப் பெற்ற சூரபன்மன் ஒரு பாதி உச்சிச் சூட்டினையுடைய சேவலானான். மறு பாதி மயிலாக வந்தான். குகன் மயிலையும் சேவலையும் கொடியாகவும் வாகனமாகவும் கொண்டருளினார்.

கங்கை மைந்தர் வீரமகேந்திரபுர போர்க்களத்தினின்றும் அத்தினத்திலேயே திருச் செந்தூர்த் திருப்பதியை வந்தடைந்தார். அரன் மகனார் ஆங்கிருந்தும் எழுந்தருளி இரத்தினங்களைப் பொழிகின்ற அருவிநீர் சொரியும் திருப்பரங்குன்றம் எழுந்தருளினார்.

விசாகன் திருப்பரங்குன்றத்தில் தெய்வ யானை அம்மையாரைத் திருமணஞ் செய்து கொண்டார். பரங்குன்றத்தில் உரிமையோடு சிலகாலம் சேந்தன் உறைந்தார். பின்னர் சுவர்க்க உலகஞ் சென்றருளினார். இந்திரனைச் சுவர்க்காதிபதியாக ஆக்கினார். குற்றமற்ற மணி முடியினை இந்திரனுக்கு அணிவித்து அமரர்களுக்கு அரசனாக்கினார் ஆறுமுகன்.

தேவ சேனாதிபதி சில பகல் வானுலகத்தில் வதிந்தார். சேய் சேனைகளுடன் தெய்வயானை அம்மையாரும் தாமுமாக வளம் பல மிகுந்த அழகிய கைலயங்கிரிக்கு எழுந்தருளினார். அங்கு அம்மை அப்பருடைய அழகிய திருவடிகளுக்கு அன்பு செலுத்தினார். கந்தவேள் பெருமான் கயிலை மலையினின்றும் ஓர் நாள் கந்தவெற்பிலுள்ள தமது திருக்கோயிலுக்கு எழுந்தருளி வந்தார். கங்கை மைந்தர் மறுவில் கற்பின் வாணுத லோடும் அளவற்ற கருணையோடு சிலநாள் அமர்ந்தருளினார். குன்று தோறாடும் குமரன்

**நூலாருள் நூல்வல்லன் ஆகுதல் வேலாருள்**
**வென்றி வினைஉரைப்பான் பண்பு** 683

வேற்படையுடைய வேற்றரசரிடம் சென்று தன் அரசனுக்கு வெற்றி தரும் வினையைச் சொல்பவனுக்கு இலக்கணமாவது அரசியல் நூலை அறிந்தவருள் எல்லாம் தான் அந்நூலறிவில் சிறந்தவனாயிருத்தலாம்.

அங்கிருந்தும் தனியாக எழுந்தருளி தணிகை மலையில் தங்கி அருளினார்.

முருகப் பெருமான் வருகையை அறிந்த நாரத முனிவர் தெய்வத் தணிகை மார்வரைக்கு வந்தார். முனிவர் முருகப் பெருமானுடைய திருவடிகளைக் கைதொழுது வணங்கினார். நாரதர் கந்தக் கடம்பனிடத்தில் வள்ளி நாயகியாரது வடிவழகை வாயாரப் புகழ்ந்து வாழ்த்தினார் வள்ளல் வடிவேற் கரத்தர் வள்ளி நாயகியாரிடத்தில் மனத்தைப் பறிகொடுத்தார். மாயோன் மருகன் வள்ளி மலைக்கு வந்தருளினார். மான் வயிற்றில் அவதரித்த வள்ளியைக் காணத் தினைப்புனம் புகுந்தார். வேடர்குல நங்கையில் விருப்பங் கொண்டார். தமது அழிவற்ற பல திருவடிவங்களை வள்ளிக்குக் காட்டியருளினார். அரன் மகனார் நம்பிராசன் மகளோடு பலநாள் களவொழுக்கம் கடைப்பிடித்தார். ஓர் நாள் உடன் போக்காகச் சிற்றூரினின்றும் வள்ளி நாயகியாரை வள்ளல் அழைத்துச் சென்றார்.

நம்பிராசன் முதலாம் வேட்டுவ வீரர்கள் மான மீதூரப் பெற்று வள்ளியைக் கவர்ந்து செல்லும் கள்வனைக் கண்டு பிடிக்கப் புறப்பட்டார்கள். போரினைப் புரிந்தார்கள். ஆற்றாத வேடுவர்கள் போரினுக்குப் பொன்றினராக வீழ்ந்தார்கள். வேடுவர்கள் முருகப் பெருமான் திருவருளால் மீண்டும் உயிர் பெற்றெழுந்தார்கள். நம்பிராசன் முதலாம் வேடுவர்கள் வள்ளி நாயகியாரைத் தாராதத்தஞ் செய்து கொடுப்ப விசாகப் பெருமான் திருமணஞ் செய்து கொண்டார்.

வேடுவகுல மங்கையாகிய வள்ளி நாயகியாரோடு சுப்பிரமணியப் பெருமான் செருத்தணி மலையில் எழுந்தருளினார். அருத்தியோடு சிலபகல் அம்மையோடும் அங்கு அமர்ந்தருளினார். பின்னர் ஒரு நாள் வள்ளி நாயகியாரோடும் வெற்றி வேற் பெருமான் கந்த மலை வந்தருளினார். இது கால வரையில் தெய்வயானை அம்மையாருக்கு ஏற்பட்ட தனிமையின் பிரிவுத் துயரைத் தவிர்தருளினார்.

இந்திரன் மகளாகிய தெய்வயானையம்மை யாரும் வேடுவ குமாரியாகிய வள்ளி நாயகி யாரும் வேற்றுமை சிறிது மின்றி அன்போடு அளவளாவினார்கள். உயிரும் உள்ளமும் செயலும் ஒன்றானார்கள். மலரும் மணமும் போலத் தமிழும் சுவையும் போல உடலும் உயிரும் போல ஒருமை உற்றார்கள்.

கிரவுஞ்ச மலையைப் பிளந்த வெற்றி வேல் பெம்மான் ஒரு ஒப்பற்ற மரம் போல்வார். சத்திகள் இருவரும் கொடி போலானார்கள். கிரியை, ஞானம் என்னும் கிளைகளாகத் தெய்வ மரத்தைப் பற்றிக் கொண்டார்கள். முருகப் பெருமான் பலவாகிய உயிர்கள் உய்வதற்குத் திருவருளாகிய மலர்களைப் பூப்பர். பிறவி வழியாக காய்களைக் காய்ப்பர். அயரா அன்பினராகிய ஆருயிர் அனைவருக்கும் வீட்டின்பமாகிய அரும் பெருங் கனியை என்றும் அருளிய வண்ணம் அமர்ந்திருப்பார். என்றும் சுவை குன்றாத அக் கனி அழியாத் தன்மை வாய்ந்தது அது பெறல் அரும் கனி.

**பெண்ணொரு பாகங் கொண்ட**
**பிஞ்ஞகன் வதன மொன்றிற்**
**கண்ணொரு மூன்று வைகுங்**
**காட்சிபோ லெயினர் மாதும்**
**விண்ணுல குடைய மாதும்**
**வியன்புடை தன்னின் மேவ**
**அண்ணலங் குமர னன்னார்க்**
**கருள்புரிந் திருந்தா னங்கண்**

(கந்தபுராணம்)

**வற்றா வருள்சேர் குமரேசன்வண் காதை தன்னைச்**
**சொற்றாரு மாராய்ந் திடுவாருந் துகளு றாமே**
**கற்றாருங் கற்பான் முயல்வாருங் கசிந்து கேட்க**
**லுற்றாரும் வீடு நெறிப்பாலி னுறுவ ரன்றே.**

(இதுவும்)

**அறிவுஉரு ஆராய்ந்த கல்வி இம் மூன்றன்**
**செறிவுடையான் செல்க வினைக்கு** 684

இயற்கையான அறிவும், கண்டார் மதிக்கும் தோற்றப் பொலிவும், ஆராய்ச்சியோடு கூடிய கல்வியும் ஆகிய இம்மூன்றும் நிறைந்தவன் வேற்றரசனிடம் தூதனாகச் செல்ல வேண்டும்.

# எனது வாழ்க்கையில் சாதுக்கள் தரிசனம்

சைவப்புலவர்மணி வித்துவான்
கலாபூஷணம் வ. செல்லையா

சென்ற இதழின் தொடர்ச்சி...

IV

புத்தளத்திலிருந்து மாற்றம் பெற்று கொழும்பு வந்து, சைவப் பெரியார் திரு. மு. வயிரவப் பிள்ளையின் வீட்டில் தங்கியிருந்தேன். அவர் சிவயோக சுவாமியின் உத்தம சீடர்களில் ஒருவர். யாழ்ப்பாணத்துக்கு வந்தால் அவர் யோக சுவாமியைத் தரிசிக்கத் தவறமாட்டார். சுவாமிகளைப் பற்றிய கருத்துக்களை விபரித்து எனக்கு உரைப்பார். அதனால் சுவாமிகளிடம் எனக்கு விசுவாசங் கூடி வந்தது. திரு. வயிரவப் பிள்ளையவர்கள் சுவாமிகளுக்கு வஸ்திரம் வழங்கி வருவது வழக்கம். ஒரு முறை அவர் வஸ்திரத்தை அனுப்பி விடு என்று அருள் வாக்குக் கொடுத்தார். அன்று காலை எங்களுக்கு சுவாமிகள் கனவில் தோன்றிக் கூறிய வார்த்தைகளையும் தான் எடுத்த வஸ்திரத்தை அனுப்பாமல் வைத்திருந்ததையுங் கூறி மன வருத்தத்துடன் இருந்தார்.

அப்பொழுது அங்கு வந்த சுவாமிகளின் அடியார் ஒருவர், சிவயோக சுவாமிகள் இறைபதஞ் சேர்ந்து விட்டதாகவும், தான் அங்கு செல்வதாகவுங் கூறினார். திரு. வயிரவப்பிள்ளை தான் கண்ட கனாவையும் கூறி, எடுத்து வைத்திருந்த வஸ்திரத்தையும் அவரிடம் கொடுத்து, சுவாமிகளின் தரிசனத்தையும் நினைத்து, கண்ணீர் சொரியக் கசிந்துருகி நின்றார். இது நடந்த சில காலங்களுக்குப் பின் நான் ஊருக்கு மாற்றம் எடுத்து வந்து சேர்ந்தேன்.

ஒரு நாள் இரவு ஏழு மணிக்கு சித்திரமேழி ஞான வைரவர் ஆலயத்துக்குச் சென்றேன். பால் போல் வெண்ணிலவு எறிக்கிறது. நான் தூயவெள்ளை ஆடை அணிந்து விபூதி தரித்துப் பரிசுத்த உள்ளத்துடன் ஆலய முன்றிலில் பிரவேசிக்கிறேன். ஆலயத்தில் மின்விளக்குகள் பிரகாசிக்கின்றன. ஆலயம் புனிதமாகக் காட்சியளிக்கிறது. அம்முன்றிலில் நின்ற கொழுத்த வடக்கன் காளை என்வரவைக் கண்டது. உடனே என்னைக் கலைத்துக் கொம்பாற்குத்த ஓடி வருகிறது. நானும் “ஐயோ இறந்தேன்,” என்று அலறிக் கொண்டு ஆலய முகப்பை நோக்கி ஓடுகிறேன். தப்பவே முடியாது, என்ற நினைவில் மீண்டும் “ஐயோ” என்று அலறுகிறேன், என்ன! அதிசயம்? இறையருளால் அக்காளை திசை திரும்பி ஆலயத்து வடபால் இருந்த பசுக்கள் தொழுவத்துக்குள் பாய்ந்தது. திரும்பிப் பார்த்தேன். கடவுள் காத்தார், தப்பினேன். என்று கூறிக் கொண்டு, மன அமைதியுடன் ஆலயத்துக்குள் பிரவேசித்தேன்.

ஆலயத்துக்குள் ஓரே அமைதி. இருபாலும் பெண்களும் ஆண்களுமாகப் பூசையைக் காணக் காத்திருக்கின்றார்கள். நானும் வழிபாடு முடித்து ஒருபால் அமர்ந்தேன். அந்நேரம் தூய வெண்ணிற உடையும், பரக்கப் பூசிய வீபூதி அழகோடும், ஒரு சற்குரு ஒருவர் ஆலயத்துள் பிரவேசித்தார். அச்சாதுவைக் கண்டதும் ஓர் அறிஞர் கூட்டம் அவரைச் சூழ்ந்து கொண்டது.

**தொகச் சொல்லித் தூவாத நீக்கி நகச்சொல்லி**
**நன்றி பயப்பதாம் தூது** 685

வேற்றரசரிடம் பல செய்திகளை தொகுத்துச் சொல்லியும் வெறுப்பான செய்திகளைச் சொல்லும் போது கடுஞ்சொற்களை நீக்கி இனிய சொற்களால் மனம்மகிழச் சொல்லியும், தன் அரசனுக்கு நன்மை செய்பவனே தூதனாவான்.

நானும் அதில் சேர்ந்து கொண்டேன்.

அச்சாது தம்மைச் சூழ்ந்தோரை அரை வட்டத்தில் நிற்கும்படி பணித்தருளினார். நாங்களும் அங்ஙனமே அரைவட்டம் அமைத்து நின்றோம். அவர் "வித்துவான்களே! உங்களிடம் ஒரு கேள்வி கேட்கப் போகிறேன்" உங்களில் யார் சரியான விடை கூறுகிறார்களோ அவருக்கு மகாவித்துவான் பட்டம் அளிக்கப் போகிறேன்; என்றார். "என்னிடம் சிறிதளவு அரிசி உள்ளது அதனைப் பல பேருக்கு உணவாக்கிப் பசிக்கு அளிக்கவேண்டும். எங்ஙனஞ் செய்யலாம். சொல்லுங்கள்," என்று ஒவ்வொருவராகக் கேட்டு வந்தார். யாரும் விடையளிக்க வில்லை. என் முறை வந்தது, 'நீர் சொல்லும் பார்க்கலாம்' என்றார் சாது.

நான் சாதுவானவரை வணங்கி விடை கூறுகிறேன், என்றேன். ஒரேயொரு முறைதான் இருக்கிறது, சிறிதளவு அரிசியைப் பசிதீரப் பல பேருக்கும் உணவாக்கிக் கொடுக்க நீரைப் பெருக்கி அரிசியைப் போட்டுக் கஞ்சி காய்ச்சிக் கொடுக்க வேண்டும். அப்போது நிறை வயிற்றுடன் பசி தீர்ந்து செல்வர் என்றேன். சாதுவும், "சரியான விடை கூறினீர். முன்னர் நீர் வித்துவான், இப்போது 'மகா வித்துவான்' என்ற பட்டத்தைச் சூட்டுகிறேன்" என்று ஆசீர்வதித்து முதுகையும் தட்டி நின்றார். நான் உடனே நித்திரையினின்றும் எழுந்தேன். கண்டது கனவு என்று நினைத்தேன். கனவில் தரிசனம் தந்தவர் சிவயோக சுவாமிகள் ஆவர். ஆயின் அவர் சிவபதமடைந்த பின் இக் கனாவைக் கண்டேன். இதன் புதுமை தான் என்னே!

**'ஒன்றை நினைக்கினதுவொழிந்திட் டொன்றாகும்**
**அன்றி யதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை**
**நினையாது முன்வந்து நிற்பினும் நிற்கும்**
**நினைவுகூர்ந்து அமைதிகொண்டேன்**
எனையாளும் மீசன் செயல்,"

» தர்ம சாஸ்திரத்தை கேளாதவனுக்கும், தர்க்கவாதம் புரிபவனுக்கும் தர்மநிந்தனை செய்பவனுக்கும், அக்கிரமமாகக் கேட்பனுக்கும், நாஸ்திகனுக்கும், சோதனை செய்பவனுக்கும், தர்மத்திற்கு விரோதமாக நடப்பவனுக்கும், சாஸ்திரத்தைக் கூறக்கூடாது.

» எவன் ஒருவன் வேண்டுமென்றே தருமத்தை அதர்மமாக சொல்கிறானோ அவன் பொதுமக்களின் வெறுப்பை வெகு விரைவில் சம்பாதிப்பவன் ஆவான்.

» ஒருவன் சகல சுகபோகங்களையும் அடைந்து அனுபவிக்கிறான், ஒருவன் அதை அற்பமாக எண்ணுகிறான், அனுபவிப்பவனைவிட அற்பமாக எண்ணுகின்றவன் உண்மையில் உயர்ந்தவனாவான். அவன் பொது மக்களால் போற்றப்படுபவன் ஆவான்,

**கற்றுக்கண் அஞ்சான் செலச் சொல்லிக் காலத்தால்**
**தக்கது அறிவதாம் தூது** 686

அற நூல்களையும், அரசியல் நூல்களையும் கற்று, பகையரசரின் சினப் பார்வைக்கு அஞ்சாமல் அவர் மனதில் பதியுமாறு செய்திகளைச் சொல்லி, காலத்திற்கேற்பத் தகுந்த வழிகளைக் கையாள்பவனே தூதனாவான்.

# விவேகசிந்தாமணியிற் பெண்கள்

முருகவேபரமநாதன்

கற்பகதரு, காமதேனு, சிந்தாமணி மூன்றும் தெய்வலோகத்தில் உள்ளன. காமதேனுவைப் பெற விசுவாமித்திரர் வெகு பிரயத்தனப்பட்டதாகக் கதை புனைந்துள்ளனர். சிந்தாமணி நினைத்ததை வழங்கும். விவேகம் புத்திக்கூர்மையைக் குறிக்கும். புத்திசீவித்தனமான பொருண்மை நிறைந்த கருத்துக்களை மனிதாய நலங்களாக மனித சமுதாயத்துக்கு வழங்கும் பொருள் பொதிந்த கவிதைத் தொகுப்பே விவேக சிந்தாமணி. ஒருபுலவர்தான் யாத்த கவிதைகளுடன் நாலடியார், பாரதம், தண்டலையார் சதகம் போன்ற பல பழைமை வாய்ந்த இலக்கியங்களிலிருந்தும் தொகுத்துள்ளார். இப்படி ஆக்கியோர்களின் அனுபவங்களும், ஆற்றல்களும், யாப்பு மேன்மையும் ஒவ்வொரு பாடல்களிலும் பளிச்சிடுகின்றன பரத்தமையும். அக்கால ஆண்களின் பொதுமகளிர் தொடர்பும்பல பாடல்களிலே சித்தரிக்கப்பட்டுள்ளன. கல்வியறிவும், இயல்பறிவும், உலகியல் அறிவும் செறிந்ததே விவேகம். இச் சொல்லை WISDOM எனச் சிலர் ஆங்கிலத்தில் எழுதியுள்ளனர். உழவுத்தொழிலின் மேன்மை இப்படிக் கவிதையாக்கம் பெற்றுள்ளது.

**அலகில்லா மறைவிளங்கும் அந்தணர் ஆகுதிவிளங்கும்**
**பலகலையாந் தொகை விளங்கும் பாவலர்தம்பாவிளங்கும்**
**மலர்குலாந்திரு விளங்கும் மழைவிளங்கும் மனு விளங்கும்**
**உலகெலாம் ஒளிவிளங்கும் உழவர் உழும் உழவாலே**

ஏரின் மகிமையை ஏரெழுபது என்ற நூலாக வடித்தவர் கம்பர். இன்றைய பாணியில் ஏர்முனைக்கு நேர் எதுவுமேயில்லையென எளிய பாணியிற் கவிதை பீறிட்டுள்ளது. இனிமேற் பெண்ணினம் பற்றிப்பேசும் செய்யுட்களை நோக்குவோம். கணவனது சொற்கடங்கா மனைவியுடன் இணைந்து வாழ்வது நரகவாழ்க்கையாகும் என்கிறது இப்பாடல்.

**தன்னுரை கொளாத மனைவாழ்க்கையது தன்னின**
**வெந்நிரயம் வீழும்வகை யேவிழுமி தம்மா**
**அன்ன ரொடு மேவியம ராடவர் தமக்குப்**
**பின்னுமொரு கூற்றுமுள தோ? பிணியு முண்டோ?**

கூற்று - இயமன், பிணி - நோய்

சொந்தக் கணவனை விடுத்துச் சோரக்கணவனை விரும்பும் பெண்பற்றிய பாடல்

**சோரமனை யாட்டிமிகச் சோரபிரான் மேன்மனதாச்**
**சேரத்தொழில் செய்யுந்திட்டம் போல் - பேர் பெரியா**
**அத்தனடி மேன்மனத்தை யானாது வைத்துகந்தே**
**எத் தொழிலுஞ் செய்வர் இசைந்து**

**கருத்து:** சோரநாயகி தன்னுடைய சோரக்கணவன் மீதே மனத்தைச் செலுத்திக் கொண்டு, எந்தச்செயலையுஞ் செய்வாள். அதேபோல, ஞானிகள் பகவானடியில் மனத்தைச் செலுத்திக் கொண்டே எந்தச் செயலையும் செய்து கொண்டிருப்பர். அவர்கள் பல செயல்களைப் புரியினும், அவர்களின் மனம் அச் செயல்களிலே மனம் இலயித்துப் போகாமல், கடவுளின் திருப்பாதங்களிலேயே நினைந்திருக்கும்.

**சோரபிரான் - கள்ளக்காதலன்,**
**பேர்பெரியவர் - பெரியஞானிகள்**
**திட்டம் போல - திறம் போல**

**தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றன்**
**வாய்மை வழியுறைப்பான் பண்பு** 687

வேற்றரசரிடம் நடந்து கொள்ள வேண்டிய முறையை அறிந்து, அவரை நல்ல மன நிலையில் காண்பதற்கு ஏற்ற சமயம் பார்த்து, தான் வந்த செய்தியைச் சொல்வதற்கு ஏற்ற இடமும் அறிந்து தான் சொல்ல வேண்டியவற்றை முன்னமே தன் மனதில் எண்ணி வைத்துச் சொல்பவன் தலையாய தூதனாவான்.

பிறர்மனை நயவாப்பேராண்மை பற்றி வள்ளுவனார் அழுத்தம் திருத்தமாகக் குறள் வடித்துள்ளார். பலாப்பழம் இருக்க ஈச்சம்பழத்தை விரும்புவதுபோன்றதே இவ்வேண்டா ஒழுக்கம் என மூலரும் பாடியுள்ளார்.

**அடுத்தமனை தொறுந்திரிவாள் கணவனுக்கு**
**முன்னுண்பாள் அடக்கமிலாள்**
**கடுத்த மொழி பேசிடுவாள் சிறுதனந்தே**
**டுவளிவளைக் கலந்து வாழ்தல்**
**எடுத்தவிடைக் கொடியாமே தண்டலையா**
**ரேயெவர்க்கு மின்பமாகக்**
**குடித்தனமே செயவேண்டிப் பிடாரிதனைப்**
**பெண்டு வைத்துக் கொண்டதாமே**

எடுத்து - மேலே தூக்கிப்பிடித்து, தண்டலையாரே தண்டலையில் வாசஞ்செய்யும் கடவுளே உலகில், அடுத்தமனை தொறுந்திரிவாள் - தன்வீட்டைவிட்டு வெளியேறிப் பக்கத்து வீடுகளிலெல்லாம் சென்று வீண்சொற்கள்பேசுபவளும், கணவனுக்குமுன் - கணவன் சாப்பிடுவதற்கு முன், உண்பவள்-தான் உணவு சாப்பிடுபவளும், அடக்கமிலாள் - பொறுமையும், தன்னடக்கமும் இல்லாதவளும், கடுத்த மொழி பேசிடுவாள் - கோபம் மிகுந்த சொற்களைப் பேசுபவளும் சிறுதனம் தேடுவள் - கணவன் வருவாயில், அவனுக்குத் தெரியாமல் சிறுபொருளை எடுத்துச் சம்பாத்தியம் பண்ணுபவளும், (ஆகிய) இவளை - இத்தகைய பெண்ணை, கலந்து வாழ்தல் - மனைவியாக்கிச் சேர்ந்து வாழ்தல் எவர்க்கும்எப்பேற்பட்டவர்க்கும் (எத்தன்மையதாகுமெனில்) இன்பமாக - சுகமுண்டாகும் - படி, குடித்தனஞ்செய்ய வேண்டி இல்வாழ்க்கை நடத்தவிரும்பி; பிடாரிதனை - பேய்க் கூட்டங்கட்குத் தலைவியாகிய ஒரு பத்திர காளியை, பெண்வைத்துக் கொண்டதாம். சில பெண்களின் ஒவ்வாமை பற்றியோர் செய்யுள் இனித் தொடர்கிறது.

**எறியென் றெதிர் நிற்பாள் கூற்றஞ் சிறுகாலை**
**அட்டில் புகாதாளரும் பிணி - அட்டதனை**
**உண்டி யுதவாதாளில்வாழ் பேயில் மூவர்**
**கொண்டானைக் கொல்லும்படை**

*(நாலடியார்)*

எறி என்று - வெட்டென்று எதிர்த்துப்பேசி கணவனுக்கு முன்னே நீலித்தன்மை கொண்டு நிற்பாள், கூற்றம் - அக்கணவனைக் கொல்லும் இயமன் ஆவள், சிறுகாலை - சிறிய விடியற்காலையில் எழுந்து குளித்து, அட்டில்-சமையற் கட்டில் சமைக்கப் போகாதவள், அரும்பிணி - கணவனுக்கு தீர்த்தற்கரிய நோயாவாள், அட்டதனை - சமையல் செய்த உணவை, உண்டு - உணவாக உதவாதாள் கணவன் உண்பதற்குக் காலமறிந்து அவனுக்கு பரிமாறாதவள், இல்வாழ்பேய் ஆவாள்-. பின்னும் இம்மூவர் இத்தகைய குணங்களையுடைய இம்மூவரும், கொண்டவனை - திரு மணஞ்செய்த கணவனை, கொல்லும் - கொலை செய்யும் படை ஆயுதமாவாள். ஆதலின் இத்தகையோரை மனைவியாகக் கொள்ளுதல் தீமை தருவதாம். ஒருமகளைப் (பெண்ணை) விவாகஞ் செய்வதற்கான முயற்சியில் ஈடுபடும் போது தகப்பன் அம்மாப்பிள்ளையின் கல்வி கேள்விகளை விரும்புவான், பெண்ணைப் பெற்றதாய் விரும்புவது பொருளை: இனத்தவர் உறவினர் விரும்புவது மரியாதையான குலம், கோத்திரம், மரபை மணப்பெண் எதை விரும்புவாள் என்றும் ஆடவனுடைய பேரழகையே. ஆகவே எல்லார்க்கும் இசைவான, நல்லகுணநலம் உடையவனுக்கே பெண்ணைக் கொடுத்தல் வேண்டுமென்பது, வெள்ளிடைமலையாம்.

**பெண்ணுதவுங்காலைப் பிதாவிரும்பும் வித்தையே**
**எண்ணில் தனம் விரும்பு மீன்றதாய் - நண்ணிமையிற்**
**கூரிய நற் சுற்றம் குலம் விரும்புங் காந்தனது**
**பேரழகு தான் விரும்பும் பெண்.**

**தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றன்**
**வாய்மை வழிஉரைப்பான் பண்பு 688**

மண், பெண்இ பொன் என்னும் மூன்று வகை ஆசையுமில்லாமல் தூயவனாக இருத்தலும், வேற்றரசின் அமைச்சரைத் துணையாக உடைமையும், சொல்லவேண்டிய செய்தியை அஞ்சாமல் சொல்லும் மனத்திடமும் ஆகிய இம்மூன்றோடு கூடிய வாய்மையும், தன் அரசன் சொல்லிவிடத்த செய்தியை வேற்றரசரிடம் சென்று கூறும் தூதனுக்கு இருக்க வேண்டிய பண்புகளாம். (வாய்மை - நம்பகத்தன்மை)

நமக்கு இறைவன் அளித்த இவ்வுடலைப் பயன்படுத்தி இறையருளைப் பெறவேண்டும். இதை நாவலர் பெருந்தகை 'நமக்கு இந்தச் சரீரங்கிடைத்தது இறைவனை வணங்கி முத்தியின்பம் பெறுதற் பொருட்டேயாம்' எனக் கூறியுள்ளார். இனிவரும் பாடல் என்ன கூறுகின்ற தென்பதை அவதானிப்போம்.

**பந்தவுடன் வீண்பாடு பட்டவுடல்சீதுர்க்**
**கந்தவுட லொன்றுக் காகாதவுடல் இந்தவுடல்**
**வைத்துப் பார்த்தென்ன வலிய வுயிர் மாய்த்துச்**
**செத்தும் போனாலது நன்று.**

மனிதவுடலைக் கொண்டவர் அதனை, நல்வழியிற் பயன் படுத்தி, அதன் உதவி கொண்டு முத்தி வழியைத் தேடவேண்டும். அவ்வாறின்றி அவ்வுடலைப் பந்தத்திற்கேதுவான வீண்பாடுபடுவதிலும், சாப்பாட்டை நிரப்பி துர்மணம் கூடுவதிலும், எப்பிரயோசனமும் இல்லை. ஒரு நன்மையும் இல்லாமல், கெட்டமணம் நிறைந்தமானிட ஆக்கையை தக்கபடி பயன் படுத்தாதிருப்பதிலும் இறந்துபடுதல் மேலாம். மாதம் மும்மாரி பெய்வதாகக் கதை. அம்மும் மாரியும் யார் யாருக்காக என்பதை இனியறிவாம்.

**கொண்டான் குறிப்பறிவாள் பெண்டாட்டி கொண்டன**
**செய்வகை செய்வான் தவசி கொடிதொரீஇ**
**நல்லவை செய்வானரசனீம் மூவர்**
**பெய் யெனப் பெய்யும் மழை**

கொண்ட கணவனின் குறிப்பறிந்து நடக்கும் மனைவியும், விரதங்களை முறைப்படி செய்து முடிக்கும் தவசியும், செங்கோல் முறைதவறாது அரசாட்சி புரியும் அரசனும் தெய்வீகச் சக்தியுள்ளவர்கள். ஆனபடியால் இவர்கள் சொற்படியே மேகமும் மழையைச் சொரியும். இம்மூவருள் 'தெய்வந்தொழாஅள் கொழுநற் தொழு தொழுவாய் பெய்யெனப் பெய்யும் மழை' யென்பது தெய்வத் திருவள்ளுவர் திருவாக்கு (55)

மேலே தரப்பட்ட பாடல் திரிகடுகத்தில் உள்ளது. பொய்யா விளக்கே விளக்கு என்றார் வள்ளுவர். விவேகசிந்தாமணி காட்டும் விளக்குகள் இவை.

**மனைக்கு விளக்கு மடவாள் மடவாள்**
**தனக்குத் தகைசால் புதல்வர் - மனக்கினிய**
**காதல் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கங்**
**கோதிற் புகழ்சாலுணர்வு**

நற்குண நற் செய்கைகளையுடைய மனைவியால் ஒருவரின் இல்லச்சிறப்பு எங்கும் விளங்குமாதலின் அவள் அவ்வீட்டிற்கு விளக்குமாவாள். நல்லமகன்களால் அவர்களின் தாய் (ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்) குறள் சிறப்புற்று எங்கும் புகழுடன் விளங்குதற்கு ஏதுவுண்டாதலின், அம்மகன்மார் தாய்க்கு விளக்குமாவர். மக்களைப் புகழ்பெறச் செய்வது கல்வியேயாம். கல்விகற்கினும் - நல்லறிவு இருந்தால் மட்டுமே அக்கல்வி ஒளிரும், ஆதலின் அக்கல்விக்கு அறிவே விளக்காம். நாவுக்கரசர் தந்த நமச்சிவாயப்பதிகத்தில்

**இல்லற விளக்கது இருள் கெடுப்பது**
**சொல்லக விளக்கது சோதியுள்ளது**
**பல்லக விளக்கது பலருங் காண்பது**
**நல்லக விளக்கது நமச்சிவாயவே**

எனப்பாடிய பாசுரத்தையும் ஒப்பிட்டுப் பார்ப்பதும் விவேகமே. விடிவாம் அளவும் விளக்கென்ற பிரயோகம் திருவருட் பயனிலே அமைந்துள்ளது.

**விடிவாம் அளவும் விளக்கனைய மாயை**
**வடிவாதி கன்மத்து வந்து**

பொருள்: மாயையினின்றும் உடம்பு முதலியவை தோன்றி உயிர்களைப் பொருந்துகின்றன.

**விடுமாற்றம் வேந்தர்க்கு உரைப்பான் வடுமாற்றம்**
**வாய் சோரா வன்க னவன்** 689

தன் அரசன் சொல்லி விடுத்த செய்தியை வேற்றரசரிடம் சென்று கூறுபவன், தனக்கு நேரக்கூடிய தீங்கிற்கு அஞ்சி வாய்தவறியும் தன் அரசனுக்குப் பழிப்படும் சொற்களைச் சொல்லாத திண்ணிய நெஞ்சனாம்.

அவ்வாறு அவை வந்து பொருந்துவது அந்த அந்த உயிர்களின் வினைக்கு ஏற்பவேயாகும். ஆணவமாகிய இருள் நீங்கி, விடிவுவரும் வரையிலும், மாயையின் காரியமாகிய இந்த உடம்பு முதலியவை உயிருக்கு விளக்குப் போன்று நின்று உதவுகின்றன.

ஆணவம் அருளை மறைக்கின்ற இருள் என்றால் - மாயை அறிவை விளக்குகின்ற ஒளிப்பொருள் எனலாம்.

**பெண்ணென்று பூமிதனிற் பிறந்துவிட்டால் - மிகப்**
**பீடையிருக்கு தடி தங்கமே தங்கம்**
**!!ண்ணொன்று வேய்ங்குழலில் ஊதிவிட்டான் - அதைப்**
**பற்றி மறக்குதில்லை பஞ்சையுள்ளம்.**

13 கண்ணனென் காதலி 4 - 7

பெண்ணாய்ப் பிறந்துபடும் அவலங்களுஞ் சபலங்களும் அனுபவிக்கும் பெண்ணினத்துக்குத் தான் தெரியும். துன்பியல் நாடகமா பெண்பிறவி.

**அல்லலே பெண்ணெனப் பிறத்த வாங்கதி**
**னல்லலே யிளமையிற் சிறத்த வாங்கதி**
**னல்லலே கட்டழகுடைமை யாங்கதி**
**னல்லலே யிரவலர்ச் சார்பி னாகுதல்**

இவ்வுலகிற் பெண்ணாகப் பிறத்தல் துன்பமேயாம். அப்படிப் பிறந்த போது, இளமைக் காலத்தில் - மங்கைப் பருவத்தை அடைந்திருத்தல் அவ்வாறு பெண்ணாய்ப் பிறப்பதிலுந்துன்பமது. அப்படிப்பருவ மடைந்த போது, பேரழகு உடையராய் இருத்தல், பருவ மாதலிலும் துன்பமானது, அவ்வழகைப் பெற்றிருந்த போது வறுமையான கணவனுக்கு மனையாளாய் இருத்தல் ஆகத்துன்பமானது. ஒவ்வொரு நிலையிலும் பெண்மை அடையும் பீடைகள் பெரிதாம். பெண்ணின் பல்வேறு நிலைகளின் பேதலிப்பு இப்பாடலிலே படம் பிடித்துக் காட்டப்பட்டுள்ளது.

பெண்புத்தி பின்புத்தியென்பர். அவள் தாயாக, தாரமாக சிநேகிதியாக, சோதரியாக ஆசிரியையாக எல்லாம் பல நிலையினின்று ஆண்குலத்தை வழிநடத்துகின்றாள். இன்றைய பெண்கள், சமுதாயச் சிற்பியாகத்திகழ்கின்றனர். மதிப்புக்குரிய பெண்ணின் புத்தியைக் கேளாதே என்பது இன்று பொருந்துமா என்ன. பாடலைப் படித்துப் பார்ப்போம்.

**தன்னைப் புகழ்வானுஞ் சாட்சி சொல்லி நிற்பானும்**
**பொன்னை மிகத்தேடிப் புதைப்பானும் - ஒன்னலர்தம்**
**நண்புத்தி கேட்பானும் நாணமில்லாதானும்**
**பெண்புத்தி கேட்பானும் பேய்**

தற்பெருமை கொண்டு திரிபவனும், நியாயத்தைவிட்டு நீங்கிப் பொய்ச்சாட்சி சொல்லித்திரிபவனும், பொன்னையும் பொருளையுந் தேடித்தானும் அனுபவிக்காமல், பிறருக்கும் உதவாமல், புதைத்து வைப்பவனும் பகைவர் எத்தகைய இதமான வார்த்தைகளைக் கூறினும், அவை கேட்டிற்கே வழிவகுக்கு மாதலின் அதைச் செவிமடுத்து நடப்பவனும், பேதைமைக் குணமுள்ள பெண்கள் கூறும் புத்தி மதியைக் கேட்பவனும் - தோற்றத்தில் மனிதர்களாய் இருப்பினும் செய்கையிற் பேய் போன்று இழிதகைமையுடையவர்களே. பெண்ணின் பெருமை பேச வேண்டியவர்கள், அன்னாரின் சிறுமை போற்றுவது இன்று வர வேற்கத்தயாராய் இல்லை.

இதுவரை பெண்ணுக்கு எந்த அளவு இடம் என்பதை விவேக சிந்தாமணி மூலம் கண்டோம். பலதுறையிலும் மேலோங்கிநிற்கும் பெண்கள் சிந்தனைத்திறமுள்ளவர்களாக வாழ வேண்டும்.

*ஆதாரம்: விவேகசிந்தாமணி*
*வானதி பதிப்பகம்*
*உள பேராசிரியர் சு.ந.சொக்கலிங்கம்.*

**இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு**
**உறுதி பயப்பதாம் தூது** 690

தான் கூறும் செய்தியால் தன் உயிரை இழக்க நேர்ந்தாலும், அஞ்சி விட்டு விடாமல் தன் அரசன் சொல்லியவாறே வேற்றரசரிடம் சொல்லித் தன் அரசனுக்கு நன்மை செய்பவனே சரியான தூதனாவான்.

# கோபுர மகிமை

A.S. இராதாக்கிருஷ்ணன் *B.A, Dip in Edu*
*ஆசிரிய ஆலோசகர்*

(சென்ற இதழின் தொடர்ச்சி)

எல்லாவற்றுக்கும் மேலாக ஆகம விதிக்கமைய கருவறையின் பிரமாணத்திற்கேற்ப கோபுரத்தின் உயரத்தன்மை அமைந்திட வேண்டும் என்பது முக்கியமான விடயமாகக் கொள்ளப்பட வேண்டும். கோபுரத்தின் உச்சியில் மூன்று, ஐந்து, ஏழு, அல்லது ஒன்பது கலசங்கள் நிறுவப்பட்டுள்ளது. கோபுரத்தின் முன், பின் ஆகிய இரு புறங்களிலாவது, இரு பக்கங்களிலாவது நின்று அதனைப்பார்ப்பவர்க்கு அடி அகன்றும், உயர்ந்தும் கொண்டே போகும் பகுதியின் அகலம் இருபக்கங்களிலும் சம அளவாகக் குறைந்தும் கோபுரம் மேல் நோக்கி உயர்ந்து செல்லுவது தெளிவாகத்தெரியும். கருவறையின் விமானங்களில் காணப்படும் பல்வேறு வேலைப்பாடுகள் கோபுரத்திலும் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். ஆயினும் கோபுரத்தின் ஒரே அளவினவாகிய முன்பக்கமும், பின்பக்கமும், வலப்புறம், இடப்புறமாகிய இரு புறங்களைக் காட்டிலும் அளவில் மிக அகன்றவை. முற்பக்கமும், பிற்பக்கமும் திறந்தவாறு சாளரங்கள் அமைக்கப்படுவன. இவற்றை நிலைகள் என்றும் மாடங்கள் என்றுங் கூறுவார்கள். சில கோபுரங்களில் மட்டமான வேலைப்பாடுகள் காணப்படும். சில கோபுரங்களில் விக்கிரகங்கள் சுதை வேலையாக அமைக்கப்படுகின்றன. வழமையாக (பொதுவாக) கருவறை விமானத்தைக் காட்டிலும் கோபுரம் உயர்ந்தே காணப்படும். இவற்றுக்கு விதி விலக்காக தஞ்சைப் பெருங்கோயில் திரிபுவனம், கங்கை கொண்ட சோழபுரக் கோயில் திரிபுவனம், கங்கை கொண்ட சோழபுரக் கோயில் என்பனவற்றின் கோபுரங்களைவிட அவ்வாலயங்களில் கருப்பக்கிருகத்தின் மீதுள்ள விமானங்கள் (ஸ்தூபிகள்) உயர்ந்தனவாகவுள்ளன என்பதும் கவனிக்கத்தக்கது.

ஆலயங்களில் கோபுரக்கட்டிடக் கலையின் வளர்ச்சித்தன்மையை வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் அனுகிப் பார்த்தால் தென்னிந்தியக் கோயில் கட்டடக்கலை அமைப்புக்களிலேயே கோபுர அமைப்பு சிறப்பான அம்சமாகக் கொள்ளப்படுகின்றது. அதாவது திராவிடக் கட்டிடக்கலைப் பாணியில்தான் கோபுர அமைப்பு முறைகள் காணப்படுகின்றன. கி.பி.12ம் நூற்றாண்டு களுக்குப் பின்பே கோயில் கட்டிடக் கலைகளில் கோபுர அமைப்புக்கள் முதன்மையான இடத்தினைப் பெறத்தொடங்கின. அதற்கு முன்னைய காலப்பகுதிகளில் தென்னிந்தியக் கோயில் அமைப்பு முறைகளில் ஆலய மூலஸ்தானத்துக்கு மேல் அமைக்கப்படும் விமானம் (துபியே) பெரிய அளவில் வனப்புடன் அலங்காரமாக அமைக்கப்பட்டுக் காணப்பட்டன. 12ம் நூற்றாண்டைத் தொடர்ந்து பிரமாண்டமான ஆலயங்கள் ஸ்தாபிதம் கண்டமையைத் தொடர்ந்து கோபுரங்களும் பெரிய அளவில் அமைக்கப்பட்டன. குறிப்பாகச் சோழர் ஆட்சிக் காலத்தில்தான் பிரமாண்டமான வனப்புடன் கலைப்பொலிவான கோபுரங்கள் அமைக்கப்பட்டன. இக் காலப்பகுதியில் முதலாம் இராஜராஜ சோழனால் கட்டப்பட்ட தஞ்சைப் பெருங்கோயில் இரட்டைக் கோபுரங்கள், அவன் மகனாகிய வீர இராசேந்திரனால் கங்கை கொண்ட சோழபுரத்தில் அமைக்கப்பட்ட கங்கை கொண்ட சோழேச்சுவர ஆலயக் கோபுரம் என்பவற்றினை சோழர்கால கோபுரக் கட்டிடக்கலையின் மகிமைக்கு எடுத்துக்

காட்டாகக் கூறலாம். தஞ்சைப்பெருங்கோயிலின் இரு பிராகாரங்களிலும் முன்புறத்து வாசல்களிலே கோபுரங்கள் அமைந்திருக்கின்றன. அக் கோபுரவாசல்கள் கேரளாந்ததன் திருவாசல், இராஜராஜன் திருவாசல் என்னும் பெயர்களால் அழைக்கப்படுகின்றன. உட் கோபுரம் மூன்று தளங்களைக் கொண்டது. அதன்மேலே சாலைபோன்ற அமைப்புக்களும் ஐந்து ஸ்தூபிகளும் அமைக்கப்பட்டுள்ளன. இருபக்கங்களிலும் துவாரபாலகர்களின் பெருவடிவங்கள் நான்கு கரங்களுடன் காணப்படுகின்றன. முதலாவது தளத்திலே கிராதார்ஜுனியம் போன்ற புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்கள் உள்ளன. வெளிக் கோபுரத்தில் ஐந்து தளங்கள் அமைந்திருக்கின்றன. முதலாவது தளத்தின் உட்புறத்திலே பிரம்மா, தக்ஷிணாமூர்த்தி ஆகியோரின் உருவங்கள் காணப்படுகின்றன. கோபுர வளர்ச்சி சோழர் காலக் கலைப்பாணியின் பிரதான அம்சங்களில் ஒன்றாகும். பிற்காலச் சோழர்கள் சிதம்பரம் கோயிலைப் புனரமைத்து விரிவாக்கஞ் செய்தனர். முதலாங்குலோத்துங்க சோழன், விக்கிரமசோழன், இரண்டாங்குலோத்துங்க சோழன் ஆகியோரின் திருப்பணிகளின் பயனாகச் சிதம்பரம் மிகவிசாலமான பேராலயமாக வளர்ச்சிபெற்றது. நான்கு திசைகளிலும் பிராகாரங்களை ஒட்டிக் கோபுரவாசல்களிலே பிரமாண்டமான ஏழு நிலைக் கோபுரங்கள் அமைக்கப்பட்டன. சோழர் காலத்திற் சிதம்பரத்தில் வளர்ச்சி பெற்ற கோபுர அமைப்பு முறை விஜயநகர காலத்திலே தென்னிந்தியக் கோயில்களின் இன்றியமையாத பேரம்சமாகியது. பிரதான தளங்கள் எல்லாவற்றிலும் பலபுதிய கட்டிடங்களும், பிரகாரங்களும், பிரமாண்டமான கோபுரங்களும் அமைக்கப்பட்டன. மதுரை நாயக்கர்களின் காலங்களிலே திராவிட கலைப்பாணியின் வளர்ச்சி பூரணமாகியது. நாயக்கர்கள் வானளாவிய கோபுரங்களை மதுரை, திருவரங்கம் முதலான தலங்களிலே உருவாக்கினார்கள். கோபுரங்கள் எல்லாவற்றிலும் மதுரை மீனாக்ஷியம்மன் கோயிலில் அமைந்த கோபுரங்களே சாலவுஞ் சிறந்தவை. அளவில் மிகப்பெரியவை. வனப்பு மிக்கவை. அலங்காரக்கோலமானவை. இந்துக் கோயில்களைக் காலவரையறை அடிப்படையிலும், பிராந்திய அடிப்படையிலும் நோக்குவதன் மூலமே அவற்றின் வரையிலாவனப்பினையும் மகிமையையும் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும் என, பேராசிரியர் சி.பத்மநாதன் அவர்கள் தமது நூலாகிய 'இந்து கலாசாரம் கோயில்களும் சிற்பங்களும்' என்ற நூலில் தென்னிந்திய கட்டிடக்கலை வளர்ச்சியில் கோபுரத்தின் வரலாற்றுச் சிறப்புக்களையும் கலைப்பொலிவு அம்சங்களையும் தெளிவுபடுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இலங்கைத் திருநாட்டின் திருக் கோயில்களில் கோபுர அமைப்பு அம்சங்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. குறிப்பிடத்தக்க ஆலயங்களிலே இராஜகோபுரங்களின் அமைப்புக்களைக்கண்டு கொள்ளலாம். இலங்கையின் முதன் முதலாக உயர்ந்த கோபுரம் அமைந்த திருத்தலம் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயமாகும். இதனை விஞ்சிய நிலையில் இன்று மாத்தளை ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் வடக்குவாசலிலே 108 அடி நவதள இராசகோபுரம் நிறைவுகண்டு குடமுழுக்கு என்னும் பெருஞ்சாந்தியினை விரைவில் காணவுள்ளமையும் குறிப்பிடத்தக்க அம்சமாகும். எனவே தென்னிந்தியக் கோயில் கட்டிடக்கலை அம்சங்களில் கோபுரம் என்னும் தூலலிங்க கட்டிடக்கலை முக்கிய இடத்தினைப் பெற்றுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக ஆலய தரிசன வழிபாட்டு முறைகளிலும் கோபுரம் முதன்மையான இடத்தினை வகிக்கின்றது.

# அங்குலச் சருக்கம்

விதுஷே ராஜ்கண்ணன் சர்மா

உயர்ந்த மதில் சூழ்ந்த சாரவுரம் என்ற நகரத்திற்கு அயலிலுள்ள ஒரு கானகத்தில் அங்குலன் என்னும் ஒரு வேடன் இருந்தான். அவன் அளவில்லாத வேட்டுவக்கிளைஞருடன் கூடி இன்பமாக வாழுபவன். மதயானையின் தந்தத்தை அரிந்து காதிற் குண்டலமாக அணிபவன். முகில்போன்ற கரியவடிவமும், புலி போன்ற வீரமுமுடையவனாய் வன விலங்குகளையும் தினை, ஈசல், மலைநெற்சாதம் இவற்றை உணவாகக் கொண்டு வாழ்பவன். அவன் ஓர் வேடுவிச்சியை மணந்து இரண்டு புதல்வர்களையும் பெற்று வாழ்ந்திருக்கும் நாளில் ஒரு நாள் வேட்டையாடும் வண்ணம் ஒரு பெருங் காட்டிற் சென்று பல இடங்களில் அலைந்தும் மிருகங்கள், பட்சிகள் ஒன்றும் அகப்படாமையால் மிகவும் வாடி பசிநோய் வருத்த சூரியன் மறைந்து இருள் எங்கும் மூடிக் கொண்டது.

அப்படி இருளிலே தன்மனைக்குச் செல்ல வழியறியாது திகைத்து அருமை மனைவி மக்கள் பசியால் வருந்துவார்களே என்செய்வேன் என்று சிந்தித்து, நான் வறிதே திரும்புவதிற் பயனில்லை, இன்றிரவு மிருகங்கள் தண்ணீர் பருக வரும். குளக்கரையில் மறைந்திருந்து அம்பினால் அவைகளைக் கொன்று தசைகொண்டு செல்வதே முறையாகும் என்று எண்ணி துட்டமிருகங்களுக் கஞ்சிக் குளக்கரையில் நின்ற ஒரு வில்வமரத்திலேறி கண்பார்வையை மறைக்கும் சிறிய கொம்பர்களை வாளினால் வெட்டி ஒதுக்கி பன்றி, மான், மரை முதலிய மிருகங்களின் வருகையை எதிர்பார்த்து விழித்திருந்தான். அவ்வில்வ மரத்தடியில் முற்காலத்திலே முனிவர்களால் வேதாகம முறைப்படி தாபித்து வணங்கப் பெற்ற ஒரு சிவலிங்கம் இருந்ததும் அன்று சிவராத்திரிதினம் என்பதும் அவ்வேடன் அறியான். தனது பார்வைக்குத்தடை என்றும் துட்ட விலங்குகளுக்குப் பயந்து விழித்திருந்து இராப்பொழுதைச் சோர்வின்றிக் கழிப்பதற்காகவும் பறித்து வீழ்த்திய வில்வபத்திரங்கள் அச்சிவலிங்க முடியின் மீது வீழ்ந்தன. மகத்துவமான சிவராத்திரி தினமாகிய அன்றிரவில் உணவும் உறக்கமும் இல்லாது இருந்து தூவிய வில்வம் சிவபிரானுக்கு நன்கிதாகிய அர்ச்சனையாயிற்று.

இவ்வேடன் அன்றிரவு இப்படியிருக்க, அவனது அன்புமனைவி ஆகிய கொடிச்சி தனது அருமை நாயகன் வராமையால் மிகவும் வாடி வேட்டையாடக் கானகம் சென்ற கணவனைக் கொடிய கரடி, புலி முதலிய விலங்குகள் கொன்றனவோ, அன்றி வேறேதும் துன்பம் விளைந்ததுவோ என்று பலவாறு சிந்தித்து மயங்கிப்புலம்பி அன்றிரவு முழுவதும் துயருற்றிருந்து விடிந்ததும் தனது நாயகனைத்தேடி நடந்தாள். சூரியன் உதித்ததும் அங்குலன் வில்வ மரத்தினின்றும் இறங்கித் தன் மனைவிமக்கள் பசியால் வாடியும், தன் பிரிவுத்துயரால் தாயகன்ற கன்றுபோல வருந்துவார்கள் என்று நினைத்து வழிக்கொண்டு சென்று மனைவி மக்களைக் கண்டு, கழிப்புடன் பின்னுஞ் சிலகாலம் வாழ்ந்து வயோதிபனாகி நோய்வாய்ப்பட்டிறந்தான். இங்ஙனம் இறந்த அங்குலனுடைய உயிரை யமதூதர்கள் வந்து பாசத்தினாற் கட்டி யமலோகம் கொண்டு போகுஞ்சமயம் அருள் வள்ளலாகிய சிவபிரான் நந்தி தேவரை அழைத்து "அங்குலன் என்னும் வேடனை யமதூதுவர்கள் கொண்டு போகா வண்ணம் தடுத்து இங்கே அழைத்துக் கொண்டு வரும்படி கணநாதர்களை ஏவுதி!" என்று திருவாய் மலர்ந்தருளினார்.

சிவபெருமான் கட்டளைப்படி திருநந்தியத் தேவர் கணநாதர்களை அழைத்து "யமதூதர்கள் கொண்டு செல்கின்ற அங்குலன் என்ற வேடனை விரைவிற் சென்று தடுத்து ஒளிபொருந்திய விமானத்திலேற்றிஇங்கே கொணர்க" என்றார். அவ்வண்ணமே நந்தி தேவர் மொழியைத் தலைக்கொண்டு, கணநாதர்கள் சென்று யமதூதர்களோடு போர்செய்து வெற்றிகொண்டு பாசக்கட்டுகளை

அவிழ்த்து விமானத்திலேற்றி நன்கிதாகிய உபசாரத்தோடு கொண்டு சென்று சிவபிரான் முன்னிலையிலே விட, எம்பெருமான் தமது கணநாதர்களோடு வாழும் பெருவரம் கொடுத்தருளினார்.

நந்திகணத்திற்குத் தோற்றோடிய யமதூதர்கள் தமதரசனான யமதர்மனுக்கு நிகழ்ந்த சம்பவத்தைக்கூற, அதைக்கேட்ட மாத்திரத்தில் யமராசன் கோபித்து நகைத்து எழுந்து தனது கடா வாகனத்திலேறி சித்திரகுப்தர் முதலாய கணக்கர்களும் வீரர்களும் சூழ நஞ்சார்ந்த கண்டத்தினையுடைய சிவபெருமான் இருக்கின்ற கைலையங்கிரியை அடைந்தான். எம்பெருமான் சந்நிதியிலே வணங்கித் தோத்திரஞ்செய்து, அடக்கத்துடன் நின்று, "சுவாமி! அரி, பிரமன் ஆதித்தலைவர்களுக்குத் தகுதிவாய்ந்த பதவிகளைக் கொடுத்தருளினீர். அடியேனுக் கருளிய இத்தண்டத்தொழிலை மூவுலகத்தும் சரிவர நடாத்தி வருகின்றேன்: யாதும் தவறு இழைத்தேனல்லேன். அழகிய சடையையுடைய பரம் பொருளே!" என்று பிரார்த்தித்து, பாசம், தண்டு, சூலம் முதலியவைகளைத் திருமுன்னிலையில் வைத்து "அடியேனுக்கு இத்தொழிலை மாற்றி வேறொரு பணி தந்தருள்க." என்று வேண்ட சிவபெருமான் யமராசனை நோக்கி, "யமனே! உனக்கு ஈண்டுவந்த குறை யாது?" என்று வினா வியருளினார். "எம்பெருமானே! வேட்டையாடி மிருகங்களைக் கொன்று தின்று மாபாதகங்களைப் புரிந்த அங்குலன் என்பான் நரகத்தைத் தவிர்த்து நந்திகணத்தவர்களால் விமானத்திலேற்றி வந்து தேவரீரதுபாதத்தில் சேர்க்கப்பட்டுள்ளான். அவன் பரிமகம் செய்தானா? மாசி மாதத்தில் புண்ணியதீர்த்தம் ஆடினானா? உயர்ந்த சிவலிங்கபூசை புரிந்தானா? தலயாத்திரை செய்தானா? அன்றேல் மகாசிவராத்திரிவிரதம் அனுட்டித்தானா? அப்படியிருக்கத் தேவரீரே! அவனுக்கு நற்கதி அளித்தால் தருமநீதி அழிந்துபோகுமே; உலகம் புரண்டுவிடுமே; அக்கொடிய பாவியினது உயிரை எடுத்துச்சென்ற நமது தூதுவர்கள் தேவரீரது கணங்களாற் பட்டபாடு சொல்லுந்தரமன்று. பாவிகட்குப் பரகதி வழங்கப்படுமானால், அடியேன் யாரைத் தண்டிப்பது" என்று கூறினான்.

சிவபெருமான், "யமனே! அங்குலனாகிய அவ்வேடன் சிவராத்திரி தினத்திலே உணவின்றி, நித்திரை விழித்து, வில்வம் சாத்தி எம்மை வழிபட்டான். ஆதலால் அவன் செய்த பாவங்கள் அனைத்தும் நீங்கின. இதை நீ அறிந்ததில்லை. சித்திரகுப்தன் ஆகிய கணக்கரும், அறியவில்லை" என்று கூறியருள, கணக்கரும் உடனே கணக்கோலையை எடுத்துப்பார்த்து அப்பாவி சிவராத்திரி என்பதறியான் உண்பதற்கு ஊண் இன்றியே பசித்திருந்தான். துட்டவிலங்குகளுக்குப் பயந்தே வில்வமரத்திலேறித் தளிர்களைக் கொய்து வீழ்த்தினான். தூக்கம் வந்தால் விழுந்து விடுவேன் என்றெண்ணி குழைகளை எண்ணி எறிந்து கொண்டிருந்தான். விதி முறையால் விரதம் அனுட்டித்தவனல்லன்!" என்று கூறினார். "அவன் அறியாது செய்தமையால் கணங்களுடன் சேர்ந்தான். விதி முறையால் விரதம் அனுட்டித்தவனல்லன் என்று கூறினார். அவன் அறியாது செய்தமையால் கணங்களுடன் சேர்ந்தான். முறைப்படி நோற்றிருந்தால் சாயுச்சிய பதவி அடைந்திருப்பான்.

இவ்விரத மகிமை யார் விரித்துரைப் பார்கள் நீ இதனை அறிந்து உனது சின்னங்களை எடுத்துக் கொண்டு யமபுரஞ்சேர்ருதி. முன்மையைப்போல் உனது தண்டத்தொழிலைத் தவறின்றிப் புரிவாயாக" என்றருள, யமராசரும் பணிந்து ஏவலாளருடன் சென்று தன் நகரத்தில் முன்போல் வாழ்ந்திருந்தான். அங்குலன் சுவர்க்காதி போகங்களை அனுபவித்து இன்புற்று வைகினான். அதன் பின்னர் தாமரைக் கண்ணனாகிய விஷ்ணுமூர்த்தியின் வைகுந்தப் பதவியை அடைந்தான். அதன்மேல் தாமரையாசனராகிய பிரமதேவரது சத்திய லோகத்தை அடைந்தான். மேலும் அவன் பெறுதற்கரிய மோட்சத்தை விரும்ப, சிவபிரான் அவனுக்கு மறுக்காது மோட்சப்பேற்றைக் கொடுக்க, நித்திய இன்பத்தை அனுபவித்து நன்கு வாழ்ந்திருந்தான். இச்சிவநிசியின் மகிமையை நன்குணர்ந்து அனுட்டித்தவர்கள் தப்பாது மோட்சம் அடைவார்கள்.

# திருவாசகத்தில் சைவசித்தாந்தம்

*திருவாசகத் தேனிசைவாணி*
***திருமதி. ஸ்வர்ணா சோமசுந்தரம்***
***கோயம்புத்தூர்***

''வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க'' உலகில் எத்தனையோ வேகங்கள். வாயு வேகம், மனோவேகம், இன்பங்களைத் துய்ப்பதில் வேகம் என்றெல்லாம் இருக்கின்றது. ஆனால் இங்கு எந்த வேகத்தைக் கெடுத்து ஆண்டான் என்றால் வினையின் வேகத்தைக் கெடுத்தாண்ட வேந்தன். வினையின் வேகம் கெடுக்கப்படவேண்டும் யாரால்? எப்போது? எப்படி? என்று வினவலாம். கண்ட அத்தைக் கொண்டு கருமம் முடிக்க வேண்டும் என்பது திருவுந்தியார். நமக்கு உபாய குருவாக வந்து தீட்சை செய்த அந்த குருவைக் கொண்டு கருமம் முடித்தல். அருளுருவாகிய குருவைத்தான் காண முடியும். அருளைக் காண முடியாது. அருளை உடைய பொருளாகிய சிவத்தையும் காண முடியாது. அருள் உருவைத்தான் காண முடியும். தெளிய முடியும். திருமுறைகள் அனைத்தும் குரு வழிபாடேயாகும். கல்லைப் பிசைந்து கனியாக்கித் தன் கருணை வெள்ளத்தழுத்து வினையைக் கடிகிறார் ஞானகுருநாதர்.

» பாலைவனத்தில் தவிப்பவனுக்கு தண்ணீராகவும், தண்ணீரில் தத்தளிப்பவனுக்கு ஒடம் போலவும், ஓடத்தை கரை சேர்க்க உதவும் துடுப்பு போலவும் இருந்து ஜோதிடம் மனிதனுக்கு உதவி செய்கின்றது, ஜோதிடம் பார்க்கும் சமயம் அவருக்கு எதிரில் வெற்றிலை போடவோ, பொடி போடவோ, சுயவிளம்பரம் செய்யவோ கூடாது.

''அத்துவா சுத்தி பண்ணி மலமகற்றி ஒழிவிலா சிவம் பிரகாசித்தற்கு ஞானம் உதிப்பித்து உற்பவம் துடைப்பன்'' என்பது சித்தியார். சிவமேயான குருநாதன் பார்வையின் நம் தொல்வினை சுட்டெரிக்கப் படுகிறது. குருநாதன் உபதேசப்படி அருளை நோக்கியே எல்லாம் செய்து வந்தால் ஆகாமியம் ஏறாது. வினைப்போகமாக வந்த பிராரத்துவம் புசித்துத் தீர்க்க வேண்டியது என்பது தெரிந்து அதில் அழுந்தாதபடி புசித்தல். இப்படியாக வினையின் வேகம் கெடுக்கப்படுகிறது.

வினையின் வேகத்தைக் கெடுத்ததால் பிறப்பு அறுக்கப்படுகின்றது. அதனால் ''பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன் தன் பெய்கழல்கள் வெல்க'' என்று போற்றுகின்றார். இதனையே,

**கண்ட அத்தைக் கொண்டு கருமம் முடித்தவர்**
**பிண்டத்தில் வாராரென்று உந்தீபற**
**பிறப்பு இறப்பு இல்லையென்று உந்தீபற**

என்று திருவுந்தியார் பேசுகின்றது. குருநாதன் எப்பொழுது வருவார்? இருவினையொப்பு, மலபரிபாகம் ஆனால் சத்திநிபாதம் கிடைத்து குருநாதன் வருவார். பக்குவமுற்ற ஆன்மாவைக் கடைத்தேற்று இச்சையினால் வருவார்.

**இருவினை நேர்ஒப்பில் இன்னருள் சக்தி**
**குருவென வந்து குணம் பல நீக்கி**
**தரும் எனும் ஞானத்தால் தன்செயல் அற்றால்**
**திரிமலம் தீர்ந்து சிவன் அவனாமே**

என்பது திருமந்திரம். சத்குருதரிசனம் என்னும் தலைப்பில் அமைந்துள்ள திருக்கழுக்குன்றப் பதிகத்தில்

**என் வினை ஒத்த பின் கணக்கிலாத் திருக்கோலம்**
**நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே**

என்கிறார் மணிவாசகர். இருவினை ஒப்பில் குருநாதன் வந்து எங்கும் இலாததோர் இன்பம் நம்பால் ஆக்குகின்றார். இந்தப் பாடலில் பாருங்கள் மணிமொழிப் பெருமான் ஒரு வித்தை செய்கிறார்.

**செங்கணவன் பால் திசைமுகன்பால் தேவர்கள் பால்**
**எங்கும் இலாதது ஓர் இன்பம் நம் பாலதா**
**கொங்கு உண் கரும் குழலி நம் தம்மைக் கோதாட்டி**
**இங்கு நம் இல்லங்கள் தோறும் எழுந்தருளி**
**செங்கமலப் பொற்பாதம் தந்து அருளும் சேவகனை**

என்ற திருவெம்பாவையில் கொங்குண் கருங்குழலி எப்பொழுது பொற்பாதம் தந்தருளும் சேவகன் ஆனாள்? திருவருட்சக்தி சூரியனுடைய பல கோடிக் கதிர்களை ஒக்கும். அவ்வளவு பிரகாசத்தை நாம் தாங்க முடியாது. ஆகவே, பலகோடி சூரியக்கதிர்களில் ஒன்றாக குருநாதனாக மானிடச் சட்டை தாங்கி வருகிறது. சூரியன் வேறு கிரணம் வேறு அல்ல. குருவே சிவம் எனக் கூறினன் நந்தி. தன்னுடைய ஆன்ம சிற்சக்தியில் சிவசக்தி நிறைந்துள்ள குருநாதன் சிவமேயாய் இருந்து இல்லங்கள் தோறும் அடியார்களின் உயிர் அறிவாகிய இல்லங்கள் தோறும் எழுந்தருளி செங்கமலப் பொற்பாதம் தந்தருளுகிறார். திருவடி தருவது என்பது திருவடி ஞானத்தை உயிரினுள் விளைவித்தல். கிடந்த கிழவியைக் கிள்ளி எழுப்புதல். விளக்கம் பெற்ற உயிர் கல்லாதன எல்லாம் கற்கிறது. காணாதன எல்லாம் கண்டு எங்கும் இலாததோர் இன்பத்தைப் பெறுகிறது. அப்போது

**சித்தம் சிவனோடு ஆட ஆட**
**செங்கயற் கண்பனி ஆட ஆட**
**பித்து எம் பிரானோடும் ஆட ஆட**
**பிறவி பிறரோடும் ஆட ஆட**
**அத்தன் கருணையோடு ஆட ஆட**

ஆனந்தத்தில் ஆழ்கிறது. இதுகாறும் ஊன நாடகத்தில் ஆட்டுவிக்கப் பெற்ற உயிர் ஞான நாடகத்தில் ஆட்டப் பெறுகிறது.

**ஊன நாடகம் ஆடுவித்தவா**
**உருகி நானுனை பருக வைத்தவா**
**ஞான நாடகம் ஆடுவித்தவா**
**நைய வையகத்துடைய விச்சையே**

என்று ஞான நாடகத்துக்கு வந்த ஆன்மா இறைவனை சிக்கெனப் பிடிக்கிறது.

**அருளுடைச்சுடரே அளிந்ததோர்கனியே**
**பொருளுடைக் கலையே புகழ்ச்சியைக் கடந்த போகமே**
**தெருள் இடத்து அடியார் சிந்தையுள் புகுந்த செல்வமே சிவபெருமானே**
**இருள் இடத்து உன்னைச் சிக்கெனப் பிடித்தேன் எங்கெழுந்தருளுவது இனியே.**

பொருள் - சிவம், அருள் - சக்தி, தெருள் - ஆன்மா, மருள் - மாயை, இருள் - ஆணவம் என்று ஐந்து பொருளையும் வைத்துப் பாடுகின்றார். அபிராமி அந்தாதியிலும்

**பொருளே பொருள் முடிக்கும் போகமே**
**அரும் போகம் செய்யும் மருளே - மருளில் வரும்**
**தெருளே என் மனத்து வஞ்சத்து**
**இருள் ஏதும் இன்றி ஒளி வெளியாய் நிற்கும்**
**அருளே, அம்புயாதனத்து அம்பிகையே.**

» பெரியோர்களையும், குருவையும் தினசரி பார்க்கும் பொழுது வந்தனம் செய்கிறவனுக்கும் அவர்களுக்கு உபசாரம் செய்கிறவனுக்கும், ஆயுள், கல்வி, கீர்த்தி, பலம் ஆகிய நான்கும் நன்கு விருத்தியடையும்.

என்று அபிராமிப்பட்டர் ஐந்தெழுத்துப் பொருளை எவ்வளவு அழகாகப் பாடியுள்ளார்? எங்கும் எதிலும் திருவருளைப் பார்த்து நாம் வியக்கின்றோம். திருவெம்பாவையே சக்தியை வியந்தது தானே! பேதித்து நம்மை வளர்த் தெடுத்த பெய்வளையின் கருணைப்ர வாகம் தானே நாம் வாழும் வாழ்வு எல்லாம் அவளால் வந்த ஆக்கம். பேதித்தல், வேதித்தல் ரசாயனவித்தை இரும்பைப் பொன்னாக்குதல், செம்பைப் பொன்னாக்குதல், செம்பிலுள்ள களிம்பை நீக்கிப் பொன்னாக்குவது அம்மை நமக்குச் செய்யும் அற்புதம். அருளுருவாக வந்து செய்யும் அற்புதம். களிம்பை அறுத்து கண்விழிப்பித்து வேதியியல் செய்வது திருவருட் கருணை ஆகவே,

**பேதித்து நம்மை வளர்த் தெடுத்த பெய்வளைதன்**
**பாதத் திறம் பாடி ஆடேலோர் எம்பாவாய்**

என்று பாடிக் கசிகிறோம். திருவருள் நம்மை என்னவெல்லாம் செய்தது?.

**சிந்தனை நின் தனக்கு ஆக்கி,**
**நாயினேன் கண்ணிணை நின் திருப்பாதப் போதுக்கு ஆக்கி**
**வந்தனையும் அம்மலர்க்கே ஆக்கி**
**வாக்கு உன் மணிவார்த்தைக்கு ஆக்கி,**
**ஐம்புலன்கள் ஆர வந்து என்னை ஆட்கொண்டு**

என்று பாட வைத்தது. வினைச் சொல்லில் தன்வினை, பிறவினை என்று இரண்டு உண்டு.

» தாய், தந்தை, குரு இவர்களின் கஷ்டத்தை அறிந்து அதைப் போக்குகிறவன் தவம் செய்த பலனை அடைகிறான். மூவரும் மும் மூர்த்திகளாகவும் முப்பெரும் தேவர்களாகவும் போற்றத் தகுந்தவர்களாவார்கள்.

» தாயிடம் பக்தி செலுத்துவதால் இம்மையில் சுகத்தையும், தந்தையிடம் பக்தி செலுத்துவதால் மறுமையில் சுவர்க்கத்தையும் குருவிடம் பக்தி செலுத்துவதால் முடிவில் பிரம்மலோக பதவியையும் அடைகிறார்கள்.

நாம் செய்வது தன்வினை. பிறர் செய்விக்க நாம் செய்வது பிறவினை. இப்பாடலில் அனைத்துமே பிறவினையாக உள்ளதைக் கூர்ந்து நோக்கினால் திருவருள் தான் நம்மை சிந்திக்க வைத்தது. வந்தனை செய்ய வைத்து உய்ய வைத்தது. ஐம்புலன்களாக நம் முன்னே அருட் குருவாக வந்தது.

**தெரிசிக்க பூசிக்க சிந்தனை செய்ய**
**பரிசிக்க கீர்த்திக்க பாதுகம் சூட**
**குருபக்தி செய்யும் குவலயத் தோர்க்கு**
**தருமுக்தி சார்பூட்டும் சன்மார்க்கம் தானே**

என்ற மன்னும் அருட்குருவாய் காசினியில் வந்து குருபரன் என்றோர் திருப்பெயர் கொண்டு வந்தது. அப்படி அந்த குருநான் வந்து ஆண்டிலனேல் நமக்கு எங்கிருந்து ஞானம் வரும்?

“நான் யார் என் உள்ளம் ஆர் (ஞானங்கள் ஆர்? என்னை யாரறிவார்? வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல் மதி மயங்கி ஊனார் உடைதலையில் உண்பலிதேர் அம்பலவன் தேனார் கமலமே சென்று ஊதாய் கோத்தும்பீ ‘‘ஆகமங்கள் எங்கே? அறுசமயம் தான் எங்கே? யோகங்கள் எங்கே? உணர்வு எங்கே. பாகத்து அருள் வடிவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப் பெருவடிவை யாரறிவார் பேச’’

என்பது சாத்திரம், தோத்திரமும் சாத்திரமும் ஆன இறைவனை வாழ்த்தி என்னையாண்ட குருநாதரைப் புகழ்ந்து பாடி நிறைவு செய்கின்றேன்.

**தந்தது உன்தன்னைக் கொண்டது என் தன்னைச்**
**சங்கரா ஆர்கொலோ சதுரர்?**
**அந்தம் ஒன்று இல்லா ஆனந்தம் பெற்றேன்**
**யாது நீ பெற்றது ஒன்று என் பால்?**
**சிந்தையே கோயில் கொண்ட எம்பெருமான்!**
**திருப்பெருந்துறை உறை சிவனே**
**எந்தையே ஈசா! உடல் இடம் கொண்டாய்**
**யான் இதற்கு இலன் ஓர் கைம்மாறே**

(நன்றி : மெய்கண்டார் இதழ்)

# கன்மம்

சித்தாந்த ஆவலர்
**சிவத்திருமதி டாக்டர். அமிர்தவல்லி கணேசன்**

(சென்ற இதழின் தொடர்ச்சி...)

**கன்மத்தின் பலன்கள்**

சாதி, ஆயுள், போகம் இவை மூன்றும் கன்மத்தின் பலன்கள் என்று கூறப்படுகிறது.

**கன்ம நெறி திரிவிதம் நற்சாதி ஆயுப் போகக் கடனதெனவருமூன்றும்**

உமாபதி சிவம்

சாதி : சாதி என்பது படைப்பு நீர் வாழ்வன, ஊர்வன, பறப்பன, விலங்கு, மக்கள், தேவர்கள் தாவரம் என்று ஏழுவகைப்படுகிறது.

**இருவினையின் தன்மைகளுக்கு ஈடான யாக்கை அண்ணலருளால் நன்னி**

சிவப்பிரகாசம்.

ஆயுள் : நீண்ட ஆயுள் சிலருக்கு அற்ப ஆயுள் கிடைக்கிறது.

**வினைப்போகமே ஒரு தேகம் கண்டாய்**
**வினைதான் ஓழிந்தாய்**
**தினைப் போதனவும் நில்லாது.**

பட்டினத்தார்.

போகம் : போகம் என்பது ஒவ்வோர் உயிரும் அனுபவிக்கும் இன்ப துன்ப நுகர்ச்சி ஆகும். வாழ்க்கைச் சூழ்நிலைக்குக் காரணமான வினை **சனகம்** எனவும் ஆயுளுக்குக் காரணமான வினை தாரகம் எனவும் இன்ப துன்பங்கட்கு காரணமான வினை **போக்கியம்** எனவும் கூறப்படுகிறது.

**கன்மம் பலன் தரும் முறைமை**

வினைகள் தாம் செய்யப்பட்ட முறையிலன்றி முன் பின்னாக மாறி வந்தும் பயன் தரும். வினைகள் பக்குவமாகியே அனுபவத்திற்கு வரும் இப்பிறவியில் செய்த வினையின் பலனை இப்பிறவியிலேயே அனுபவிப்பது திருஷ்ட உபயோக்கிய **கன்மம்** எனப்படும்.

**குற்றொருவரைக் கூறைகொண்டு**
**கொலைகள் சூழ்ந்த களவெலாம்**
**சொற்றொருவரைச் செய்த தீமைகள்**
**இம்மையே வருந்திண்ணமே**

முற்பிறவியில் செய்த வினைகள் அதனை அடுத்து வரும் மறுபிறவியில் அனுபவிப்பது அதிருஷ்ட உபயோக்கிய கன்மம் எனப்படும் எதோ ஒரு பிறவியில் செய்த வினைகளைப் பல பிறவிகளுக்குப் பின்வரையறுக்கப்படாத ஏதோ ஒரு பிறவியில் அனுபவிப்பது அநியத கால உபயோக்கிய **கன்மம்** எனப்படும்.

**கன்ம மாறல்**

உயிர்களுக்கு நன்மையை நினைக்க, சொல்ல, செய்ய அது தீமையாக முடிவதும், தீமையை நினைக்க, சொல்ல, செய்ய அது நன்மையாக முடிவதும் உண்டு. இதற்கு ஊழ்வலி துணையாக நிற்கும்.

**ஊழிற் பெருவலி யாவுன மற்றொன்று**
**சூழினும் தான் முந்துறும்.**

திருக்குறள் 380

**நியதி தத்துவம்**

அவரவரால் ஈம்பப்படும் வினைப்பனை அவரவரே நுகருமாறு அரசர் ஆணை போல் நியமித்து (வரையறை செய்து) நிறுத்துவதே நியதி தத்துவம் எனப்படுகிறது.
கன்ம பலனைச் சேர்ப்பிப்பவன் இறைவன்

**யோனிக் கெல்லாம் இறைவன் ஆணையினால்**
**இன்பத் துன்பங்கள் இயைவதாகும்.**

சிவஞானசித்தியார்

**செய்வானும் செய்வினையும் சேர் பயனும் சேர்ப்பவனும்**
**உய்வான் ஊன் என்று உளர்**

திருவருட்பயன்

வினையையும் வினை செய்கிறவனையும் கூட்டுபவன் இறைவன். வினைப் பயனை, வினை செய்தவனுக்குக் கூட்டுவதும் இறைவன். இதனால் உய்தி பெறுபவன் உயிர். வினை அறிவில்லாத சடப்பொருள். தானாகப் பிறவிகளைத் தரமாட்டாது அவ்வினையைப்

பூசிக்கும் படி பிறவி பேதங்களை வினைக்கேற்ப அமைப்பவர் கடவுளே. சடமாகிய வினையும் உடம்பும் தனக்கென ஒரு செயலும் அறிவுமில்லாத ஆன்மாவும் நம்முட் கூடுந் தன்மை அவைகளுக்கில்லை. இறைவனே அந்தந்த உயிர்கள் செய்த வினைப் பயன்களை அந்தந்த உயிர்கள் அனுபவிக்கும் படி கூட்டுவிப்பான்.

**கன்ம பலனைச் சேர்ப்பிக்கக் காரணம்**

உயிர்களுக்கு முயற்சி ஏற்படக் காரணமாயிருப்பவை வினைப்பன்களே இறைவன் உயிர்களுக்கு வினைப் பயனைச் சேர்க்காவிட்டால், உயிர்களுக்கு முயற்சி இல்லாமல் போகும். முயற்சி இல்லாவிட்டால் உயிர்கள் செயல் இழந்து ஆணவத்துள் கிடக்க நேரிடும். ஆணவத்தின் ஆற்றல் கெடுவதற்கே இறைவன் உயிர்களுக்கு வினைப் பயனைத் தருகின்றான். இறைவன் உயிர்களுக்கு கன்ம பலனைக் கூட்டுவிப்பது அவற்றின் மேல் உள்ள பெருங் கருணையினால் தான் என்பதை உணர வேண்டும். நல்வினைக்குப் பயனாக நன்மையைக் கூட்டுவித்துத் தீவினைக்குத் துன்பத்தையும் தருகிான். உயிர்கள் உணர்ந்து திருத்தி நல்வழியில் வாழ வேண்டும். என்ற பெருங் கருணையினால் தான் என்பதை உணர வேண்டும்.

கன்மம் நீங்கும் வழி

**விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்**

- 11ம் திருமுறை -

**சிவ சிவ என்கிலர் தீவினையாளர்**
**சிவ சிவ என்றிடத் தீவினையாளும்**

- 10ம் திருமுறை -

**சரணம் சரணம் என நின்ற நாயகி தன்னடியார்**
**மரணம் பிறவி இரண்டும் எய்தார் இந்த வையகத்தே**

(அபிராமி அந்தாதி)

**கூறுமடியார்கள் தீர்க்கும் முகம் ஒன்று**

- திருப்புகழ்-

**நன்று நாடொறும் நம் வினை போய் அறும்**
**என்றும் இன்பம் தழைக்க இருக்கலாம்**

-5ம் திருமுறை-

**அவ்வினைக் கிவ்வினை யாம் என்று சொல்லும்**
**அஃதறிவீர**
**உய்வினை நாடாதிருப்பதும் உத்தமருக்கு**
**ஊனமன்றே கைவினை செய்தெம் பிரான் கழல்**
**போற்றுதும் நாமடியோம்**
**செய் வினை வந்தெம்மைத் தீண்டப்பெறா**
**திருநீலகண்டம்.**

- 1ம் திருமுறை-

முற்பிறவிகளில் செய்த வினைப் பயனாக இந்தப் பிறவியில் துன்பப்படுகிறோம். என்பதை அறிவீர்கள் அந்தத் துன்பங்களைப் போக்கிக் கொள்ள உரிய வழிகளை ஆராய்ந்து செய்யாமல் இருப்பது உங்களுக்குக் குற்றம் அல்லவா? அடியார்களாகிய நம் கையாற் செய்யப்படும் சிவ தொண்டுகளைச் செய்து எம் பெருமானின் திருவடிகளை வணங்குவோம் அப்படிச் செய்தால் முற்பிறவிகளில் செய்யப்பட்ட தீவினைகள் வந்து நம்மை தீண்டப் பெறா. இதற்கு திருநீலகண்டத்தின் மீது ஆணை என்று திருஞானசம்பந்தர் நமக்கு வழிகாட்டுகிறார்.

குருவின் மூலம் தீக்கை பெற்று இறைவழிபாடு செய்ய வேண்டும். குருவின் அருளால் சஞ்சித வினை வத்த வித்துப் போல் ஆகும். பிரார்த்த வினை உடல் ஊழாய்க் கழியும் உயிரைத் தாக்காது. இறை வழிபாட்டில் நிற்பவர்களுக்கு பிரார்த்த கன்ம தாக்குதல் குறையும். அதைத் தாங்கும் ஆற்றல் பெருகும். சஞ்சிதம் பிரார்த்த கன்மமாக அனுபவிப்பதற்குப் பக்குவப்படாத நிலையிலேயே இறைவன் அருளால் தீரும்.

**பண்ணிய உலகினில் பயின்ற பாவத்தை**
**நண்ணி நின்றறுறப்பது நமச்சிவாயவே**

- அப்பர்-

ஆகாமியம் ஞானத்தினால் ஏற்படாதிருக்கும். உயிரானது ஞானம் பெற்றதன் பயனாக எல்லாம் இறைவன் செயல் என்பதை உணர்ந்து தான் பணி நீத்து இறைபணி நிற்கும்.

**அவனே தானே யாகிய அந்நெறி**
**ஏகன் ஆகி இறைபணி நிற்க**
**மலமாயை தன்னொடு வல்வினை யின்றாம்.**

சிவஞானபோதம்.

# கார்த்திகைக் கார்த்திகையில் அண்ணாமலைக்குன்றின் மேல்தோன்றுகின்ற ஒளிப்பிழம்பைக் காணக் கண்கள் கோடி வேண்டும்

சி. எம் இராமச்சந்திரன் செட்டியார்
பீ.ஏ.பி.எல்

உலகத்தில் உள்ள பொருள்களை மண் - நீர் - நெருப்பு - காற்று - வெளி என ஐந்து பிரிவுகளாகப் பிரித்து வழங்குவதுண்டு - இப்பிரிவினை கீழ் நாடுகளில் மட்டுமல்ல மேல் நாடுகளிலும் பண்டைக் காலம் முதல் வழக்கத்தில் கொண்டிருக்கின்றார்கள். இவைகளை அடிப்படைப் பொருள்கள் என்று வழங்கி வந்திருக்கிறார்கள். மேல்நாட்டார்கள் எலிமெண்ட்ஸ் என்றும், வட நாட்டார்கள் பூதங்கள் என்றும் வழங்குவார்கள். மேல் நாட்டில் விஞ்ஞானத்துறையில் ஆராய்ச்சி பெருகப் பெருக இவைகள் அடிப்படைப் பொருள்கள் அல்ல என்று முடிவு கட்டி அவற்றைக் கூறு கூறாகப் பிரிவினை செய்து இனிமேல் பிரிக்கக் கூடாது என்ற வகையில் சிலவற்றை மட்டும் அடிப்படைப் பொருள்களாகக் கண்டு பிடித்திருக்கின்றார்கள். அவற்றுள் சிலவற்றைப் பொன்வகைகள் என்றும், மற்றவற்றைப் பொன் அல்லாதவைகள் என்றும் இரண்டு பிரிவாக்கி உள்ளார்கள். பொன் என்றவகையில் தங்கம், வெள்ளி இரும்பு முதலியவைகளும் பொன் அல்லாத வகையில் கந்தகம், கரி முதலியவைகளும் உதாரணமாகக் கொள்ளப்பட்டுள்ளன. இந்த வகையில் மேலே கூறிய பூதப் பொருள்களில் மண் என்பது பல அடிப்படைப் பொருள்களின் கலப்பென்றும் நீர் என்பது இரண்டு வாயுக்களின் கலப்பென்றும், காற்று என்பது சில வாயுக்களின் மிச்சம் என்றும் கண்டு பிடித்திருக்கிறார்கள். மற்றை இரு பொருள்களில் வெளி என்பதின் தன்மை இதுவரை நன்கு அறியப்படவில்லை. நெருப்பு என்பது பொருள் அல்ல என்றும் இரண்டு பொருள்களின் சேர்க்கையால் ஏற்படும் ஓர் ஆற்றல் என்றும் அறியப்பட்டது. அவ்வகை ஆராய்ச்சியில் நெருப்பில் சூடு, ஒளி என்ற இரு நிலைகள் இருப்பதை அறிந்து இரண்டையும் இரண்டு விதங்களாகக் கொண்டு தனித்தனி ஆராய்ச்சிப் பகுதிகளாக நாளது வரை எழுதி வந்திருக்கின்றார்கள். விஞ்ஞானத் துறையில் படிக்கும் மாணவர்களும் சூடு: ஒளி என்ற பெயர்களில் தனித்தனி பாடங்கள் வைத்துக்கொண்டு படிக்கிறார்கள் சூட்டிற்கும் ஒளிக்கும் ஒரு வித சம்பந்தமும் இல்லை என்னும் முறையில் அப்பாடங்கள் போதிக்கப்ட்டன. ஆனால் தற்காலிக ஆராய்ச்சியில் இப்பிரிவினையும் இதனால் கொண்ட வேற்றுமையும் மறைந்து வருகின்றன. பேராசிரியர் ஐன்ஸ்டீன் முதலியோர்கள் செய்து வந்த ஆராய்ச்சியின் முடிவாகப் பொருள்களின் தட்ப வெப்பங்களில் ஒரு கூறு சூடாகவும், ஒரு கூறு ஒளியாகவும் ஏற்படுகின்றது என்பது தற்காலிக ஆராய்ச்சியின் முடிவு ஒவ்வொரு பொருளும் அணுக்களின் சேர்க்கையால் ஏற்பட்டது. அவ்வணுக்களிலும் ஆண் பெண் வேறுபாடு உண்டு. இவ்விரண்டும் ஒன்றையொன்று சுற்றிக் கொண்டிருக்கும். அச்சுற்றுதலின் வேகத்தைப் பொறுத்திருக்கிறது அதனுடைய வெப்பநிலை. அவ்வெப்ப நிலையை வெப்பக் கருவியால் அளக்க முடியும். மிக நிதானமாக இருக்கும்போது அதனைத் தட்பம் வெப்பம் என்கிறார்கள். அது மிக ஏற்றம் அடையும்போது அதனை ஒளி என்கிறார்கள். கீழான நிலை தொடுகிற புலனுக்கும் மேலான நிலை கண்புலனுக்கும் அறிமுகம் ஆகின்றது. இவ்விரண்டிற்கும் மிகக் கீழும், மிக மேலும் இருக்கும் நிலைகளும் உண்டு. இவைகள் மானுடப் புலன்களுக்கு எட்டுவதில்லை. இவைகளில் சிறிது தொலை மட்டும் விஞ்ஞானம் அறிந்து வருகின்றது. அறியாத நிலை உண்டு என்பதை அடி, முடி தேடிய ஐதீகம் விளக்குகின்றது. விஞ்ஞான ஆராய்ச்சியே பொருள்களின் நிலைமையைக் கூறும்போது அலைகள் என்ற சொல்லால் குறிக்கின்றனர். பேரலைகள், நடு அலைகள். சிற்றலைகள் என்ற முப்பிரிவினைகள் ஆக்கி வானொலித் தன்மைகளை விளக்குகின்றார்கள்.

அசைவில்லாத ஒரு நீர் நிலையிலே ஒரு பருக்கைக் கல்லை எறிந்தால் அக்கல் விழுந்த இடத்திலிருந்து சிற்றலைகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பரவிப்போவதை அறிவோம். கடலிலோ அவ்வலைகள் பேரலைகளாகத் தோன்றும். உலகப் பொருட்கள் எவை எடுத்தாலும் இவ்வித அலைகளினால் தோற்றம் ஆகின்றன என்பர். அலையின் அசைவுகளால் உண்டாகின்றது. அவ்வசைவுகளே சூட்டினையும் ஒலியினையும் படிப்படியாகத் தோற்று விக்கின்றன. சிற்றலைகளுக்குக் கீழே செல்லச் செல்ல நமது புலன்களுக்கு எட்ட முடியாத அலைகளும், பேரலைகளுக்கு மேலே செல்லச் செல்ல கோசரம் ஆகாத பாலைகளும் உண்டு. ஒரு காலம் இரண்டு அறிஞர்கள் நம்முள் வாதாடினார்கள். ஒருவர் சிற்றலைகளுக்குக் கீழே எதுகாறும் அசைவு உண்டு என்று கண்டுபிடிக்கச்சென்றார். மற்றொருவர் பேரலைகளுக்கு மேலே எது உண்டு என்று கண்டு கூறச் சென்றார், அவ்விருவரும் அவ்விரண்டு முடிவுகளையும் காண முடியாமல் திகைத்துத் திரும்பினார்கள். இதுதான் அடி முடி தேடிய வரலாற்றின் கருத்து.

இனி விஞ்ஞான ஆராய்ச்சியில் காணும் மற்றொரு பகுதியைக் காண்போம். இயற்கை உலகில் மிகப் பெரிய பொருள்களுள் மிகச் சிறிய பொருள்களும் உண்டு. மிகப் பெரிய பொருட்கள் அண்டங்களாக உருளுகின்றன. மிகச் சிறிய பொருட்களோ அணுவுக்குள் அணுவாக அசைந்து கொண்டிருக்கின்றன. மையத்தில் உள்ள பொருட்களே மானிடர்க ளாகிய நமக்கு எளிதில் தோன்றுகின்றன. நாமிருக்கும் இவ்வுலகைச் சுற்றிக் கோள்கள் தோன்றுகின்றன. கோள்களுக்கிடையில் கதிரவன் இருந்து அவற்றை ஆட்டி வைக்கிறான். அவனுக்கு மேலு உள்ள கதிர் மண்டலங்களுக்கு அளவில்லை. சில மண்டலங்கள் கணக்கற்ற ஒளி வருடங்களுக்கு அப்பால் இருக்கின்றன. இவைகளைக் கண்டுபிடிக்க விஞ்ஞானம் முயலுகிறது. முன்னொருகால் ஓர் அறிஞன் அதனைக் கண்டுபிடிக்க முயன்றான். முடியவில்லை. இனி அதற்கு எதிரியடையாக அணுவுக்குள் கணக்கற்ற சிறு பொருட்கள் இருக்கின்றன. அவைகளையும் கண்டு பிடிக்க விஞ்ஞானம் முயலுகிறது. அதையும் கண்டு பிடிக்க மற்றொரு அறிஞன் முயன்றான். அவனாலும் முடியவில்லை. இதைத்தான் அடி முடி தேடிய படலமாக விளக்குகின்றது. இதையே வாதவூரடிகள் “வேதங்கள் ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே” என்று கூறுகிறார். மேலும் பாதாள மேழினும் கீழ் சொற்கழிவு பாதமலர் போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே” என்றும் “முன்னைப் பழம் பொருட்கு முன்னைப் பழம் பொருளே, பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே” என்றும் கூறியிருப்பதன் பொருளும் இதுவேயாகும். இந்தக் கருத்தினையே நாம் திருவண்ணாமலை ஐதீகத்தில் காண்கிறோம்.

மேலே கூறிய ஐந்து பூதங்களுக்கும் ஐந்து ஸ்தலங்களை வகுத்து நம் நாட்டில் வழிபாடு செய்யப்படுகின்றது. அவைகளில் நெருப்பு ஸ்தலமாகத் திருவண்ணாமலை கொள்ளப் படுகின்றது. இங்கே தான் அடிமுடி தேடியதாக ஐதீகம். ஆகவே இந்த ஸ்தலத்துக்குப் பல்லாயிரக் கணக்கில் நாட்டு மக்கள் சென்று வழிபாடு செய்வதில் வியப்பு இல்லை. ஓவ்வொரு ஆண்டிலும் கார்த்திகைத் திங்களில் முழுமதியாகிய கார்த்திகை நாளில் மலையின் உச்சியிலும் திருக்கோயில் எழுந்தருளியி ருக்கும் பஞ்ச மூர்த்திகளின் முன்னிலையிலும் ஜோதிகள் அல்லது ஒளிப் பிழம்புகள் தோற்றமளிக்கும். இக் காட்சியைக் காண்பதற்காகத்தான் கணக்கற்ற மக்கள் செல்கின்றார்கள். மலையே ஒளிப்பிழம்பாக விளங்கிற்று. அதன் அடியும் முடியும் அறிஞர்களால் காண முடியவில்லை. அந்த ஐதீகத்தின் கருத்தினை அறியவே மக்கள் முனைதல் வேண்டும். ஒளிப்பிழம்பு மிகப் பெரிதாகத் தோன்ற அதனைக் கண்டு விளக்கொளி வரிசையாக வைத்து மக்கள் தேர்வு பெறுவார்கள். இது தான் வீடுகள் தோறும் வைக்கும் கார்த்திகை விளக்கீடு. இவ்விளக்கீட்டு விழா சம்பந்தர் காலத்துக்கு முந்தியே இருந்தது என்று பூம்பாவைப் பதிகம் கூறுகின்றது. ஒளிப் பிழம்பும் விளக்கீடும் தோற்றமளிக்கும் போது மாந்தர்களது நெஞ்சங்களில் அறிவுப் பிழம்பும் அறிவு ஒளியும் திகழ வேண்டுமல்லவா? அதனைத் திகழச் செய்வதற்காகவே திருக்கார்த்திகை விழாவில் அண்ணாமலையார் ஆலய அதிகாரிகள் அறிவுச் சொற்பொழிவுகளை நிகழ்த்தவும் ஏற்பாடு செய்து வருகிறார்கள்.

# சைவ பூஷணம்

(332) சிவதீக்ஷையுடையவருக்குச் சைவரென்றபெயருண்டு. சிவதீக்ஷையுடைய பிராமணரல்லாத ஏனைய மூன்று சாதியிலுள்ளார், விபூதி உருத்திராக்கம் அணிந்து சிவபூஜையுடன் அந்தக் கரணசுத்தியுள்ளவராயும் இல்லறமுடையவராயும் நிலைத்த நியமத்தையுடையவராயும் புலால் முதலியவைகளை உண்ணாதவராயும் இருப்பின் அவர்களுக்கு ஆசௌசம் பதினாறுநாளும், பதினைந்து நாளுமாகும். இவ்வாறு இரண்டு விதமாகக் காமிகத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

(333) பெண்கள், புருஷர்கள், யானை, மரங்கள் இவைகளுக்கு வயது நூறு, குதிரைக்கு வயது முப்பத்திரண்டு, ஒட்டகைக்கு வயது அறுபது. கழுதைக்கு வயது இருபத்து நான்கு. ஆட்டுக்கு வயது பதினாறு, நாய்க்கு வயது பன்னிரண்டு, பறவைகளுக்கு வயது முப்பது. பறவைகளுள் காகங் கழுகு இரண்டிற்கும் வயது ஆயிரம். பாம்பிற்கு வயது இரண்டாயிரம். நரிக்கு வயது நலாயிரம், இவ்வாறு சாத்திரங்களிற் கூறப்பட்டிருக்கின்றது. (333)

(335) ஸ்ரீ மகாதேவருக்குச் சமர்ப்பித்த தாம்பூலம், சாத்தினவிபூதி, சாத்தின புஷ்பங்கள், புஷ்பமாலைகள், சந்தனம், நைவேத்தியமாகச் சமர்ப்பித்த பால், அன்னம், பணியாரம், நெய், இளநீர், தேங்காய், வாழைப்பழம், மாம்பழம், அபிஷேகஞ்செய்த திருமஞ்சனம் ஆகிய இவையனைத்துஞ் சிவதீக்ஷையுடைய மகான்கள் உட்கொள்ளலாம். உட்கொண்டால் இவர்களுக்கு நிர்மாலிய தோஷங்கிடையாது. இவ்வாறு காமிகாகமத்திற் கூறப்பட்டிருக்கின்றது.

(336) மூர்த்தாக்கள் ஐந்து. முகம் நான்கு, இருதயம் ஒன்று, கழுத்து ஒன்று, தோள் இரண்டு, தொப்புள் ஒன்று, வயிறு ஒன்று, பிருஷ்டம் ஒன்று, மார்பு ஒன்று, ஆண்குறி ஒன்று, குய்யம் ஒன்று, தொடை இரண்டு, முழந்தாள் இரண்டு, கணுக்கால் இரண்டு, இடுப்புக்கு மேலுள்ளபக்கம் இரண்டு, இடுப்பு ஒன்று, பக்கங்கள் இரண்டு, கால் இரண்டு, கை இரண்டு, மூக்கு ஒன்று, சிரசு ஒன்று, புயம் இரண்டு, இந்த முப்பத்தெட்டும் கலா நியாசஞ்செய்யுந் தானமென அறிந்துகொள்க. இதற்குப் பிரமாணம் சித்தாந்த சாராவளியிலுள்ளது.

(338) சாவனமாசமென்றும், சௌரமாசமென்றும், சாந்திரமாசமென்றும், ஆசவமாசமென்றும் மாசம் நான்கு வகைப்படும். தன்னுடைய புத்தியினால் இவ்வளவு நாளென்று கற்பித்துக் கொள்வது சாவனமாசம், இப்பொழுது உலகில் வழங்கிவருவது சௌரமாசம். அஃதாவது சூரியன் இருக்கும் ராசியைக்கொண்டு வழங்குவது. அமாவாசைகழித்து பிரதமை முதல் மறு அமாவாசைவரை சாந்திரமாசம். இருபத்தேழு நக்ஷத்திரங்கள் கொண்டது ஆசவமாசம். இவ்வாறு நான்கு மாதங்களும் அறிந்து கொள்க. (338)

(339 - 3391/2) பிரமாவினுடைய வாயிலில்செய்யும் பாரபத்தியத்தில் அஃதாவது அதிகாரத்தில் ஒருவர்பின் ஒருவராக உள்ளவர் பதினான்கு மனுக்களாவார், அவர்களுள் முதலாவது சுவாயம்புவ மனு. இரண்டாவது சுவாரோசிஷமனு. மூன்றாவது உத்தமமனு, நான்காவது தாமசமனு. ஐந்தாவது ரைவதகமனு. ஆறாவது சாக்ஷுசமனு. ஏழாவது வைவசுதமனு. எட்டாவது சூரியமனு, ஒன்பதாவது தக்ஷமனு, பத்தாவது பிரமகர்மமனு. பதினோராவது ருத்திரமனு, பன்னிரண்டாவது சௌவர்ணமனு, பதின்மூன்றாவது ரௌச்சியமனு, பதினான்காவது பிருத்தியமனு, இவ்வாறு பதினான்குமனுக்களும் பிரமாவினுடைய ஒருபகலாகிய முப்பது நாழிகைக்குள் தனித்தனி ஒவ்வொருவரும் நூறுவயது வரை இருந்து வாயிலதிகாரத்தைச் செய்வரென்றறிக, சர்வார்த்தங்களையும் அறிந்தவரான வித்தியாரண்யசுவாமிகள் இவ்வாறு சொல்லியிருக்கின்றனர். (339 - 3391/2)

(மிகுதி அடுத்த இதழில் தொடரும் ........)

# சைவ ஞானிகளான சந்தான குரவர்

சித்தாந்தரத்தினம்
கலாநிதி க. கணேசலிங்கம்

இறைநிலை காண்பதற்குப் பக்தியும் ஞானமும் முக்கிய வழிகளாகச் சைவத்தில் கொள்ளப்படுகின்றன. பக்தி நெறி பரப்பி சைவசமயத்தைப் பேணிப் பாதுகாத்தவர்கள் சமயக்குரவர்கள். இவர்கள், திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார், சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் ஆவர்.

ஞானநெறியை வளர்த்து, சைவத்தின் கொள்கையை விளக்கி, சைவத்தைப் பேணியவர்கள் சந்தானகுரவர்கள். இந்த அருள்ஞானிகள் குருசீட பரம்பரையில், ஒருவர்பின் ஒருவராக, சந்தானமாக வந்தபடியால் இவர்கள் சந்தானகுரவர் எனப்படுகின்றனர். மெய்கண்டசிவம், அருணந்திசிவம், மறை ஞானசம்பந்தசிவம், உமாபதிசிவம், ஆகிய நால்வரும் சந்தானகுரவர்கள்.

இறைவனை அடைவதற்குப் பக்தியே எளிமையானது என்று கூறப்படுகின்றது. இறைவன் பக்திக்கும் பணிந்து அருள்வான் என்பதை நாயன்மாரின் வாழ்விலிருந்தும் வாக்கிலிருந்தும் உணரலாம். அருளாளரைப் பொறுத்தவரையில் இது உண்மையாயினும், உலகத்தவருக்கு பக்தியோடு ஞானமும் வேண்டப்படுகிறது. பக்தி உள்ளத்து உணர்வையும் நம்பிக்கையையும் அடிப்படையாகக் கொண்டது. ஆதலின் தெளிவின்றி பக்தியை வளர்க்கும் பொழுது, பல வேளைகளில் மூட நம்பிக்கையை வளர்ப்பதற்கும் இடமேற்படுகின்றது. இதனால் இறை நம்பிக்கையில் தளர்வேற்பட்டு, எதிர்பாராத விளைவுகளும் உண்டாகின்றன. "சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தின் உள்ளார் திருவடிக்கீழ்" என்ற திருவாசகத் தொடர், பக்தியை வளர்க்கும் திருமுறைகளையும் பொருள் தெரிந்து ஓதுவதை வலியுறுத்துவதாக உள்ளது.

இறைவன் அறிவு வடிவானவன் என்பது சைவக் கொள்கை. அவனின் பண்பு பெருகிய அன்பு. சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவன் அன்பின் வேறானவன் அல்ல. "அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்" என்று திருமந்திரம் கூறுகின்றது. அன்பின் விரிவு அருள் "அருள் எனும் அன்பின் குழவி" என்பது திருக்குறள்.

சிவனின் சக்தி அவனின் அருளே. சூரியனும் ஒளியும் போல் சிவனும் சக்தியும் பிரிவில்லாதவர்கள். "சக்தி பின்னமிலான் எங்கள் பிரான்" என்பது திருவருட்பயன் என்னும் சித்தாந்த நூலில் வரும் தொடர்.

பக்தியினால் இறையருளைப் பெறமுடியும் என்றாலும், பக்தியின் முடிநிலை ஞானம் என்பதும் அருளாளரின் அனுபவக் கருத்தாக உள்ளது. அப்பர் அடிகள் எத்தகைய துன்பம் துயர் வந்து தளர்ந்தபோதும் சிவனிடத்தில் தளராத பக்தி பூண்டவர். அவரின் தேவாரப்பாடல்கள் படிப்பவரை பக்தியில் திளைக்க வைப்பன. ஆயினும், அவரும் "ஞானத்தால் தொழுவார் சிலஞானிகள், ஞானத்தால் தொழுவேன் உனை நானல்லேன்" என்று கூறி உருகுகிறார். இங்ஙனம் உருகியவர், "ஞானத்தால் தொழுவார்கள் தொழக்கண்டு ஞானத்தால் உனை நானும் தொழுவனே!" என்று கூறுகிறார். இறையருளை ஞானத்தாய் என்று போற்றி, தானும் ஞானத்தால் தொழுவதாகக் கூறுவது சிந்தனைக்குரியது.

ஞானத்தால் தொழுவதை "எழில்ஞான பூசை" என்று சைவசித்தாந்த நூலாகிய சிவஞான சித்தியார் கூறுகிறது. பக்தி நெறிக்குத் திருமுறைகள் துணை செய்கின்றன. ஞானநெறிக்கு சித்தாந்த நூல்கள் வழிவகுக்கின்றன. மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும் பதினான்கு சித்தாந்த நூல்களில் முதன்மை நூலாகத் திகழ்வது சிவஞானபோதம், இதன் ஆசிரியர் சந்தானகுரவராகிய மெய்கண்ட தேவர்.

சமயகுரவராகிய திருஞானசம்பந்தருக்கு சிவனருளால் மூன்று வயதில் ஞானஉபதேசம் கிடைத்தது. சந்தான குரவராகிய மெய்கண்டாருக்கு இரண்டு வயதில் திருக்கைலாயத்திலிருக்கும் பரஞ்சோதி முனிவர் ஞான உபதேசம் செய்தார். வடக்கே கைலை மலையிலிருந்து தெற்கேயுள்ள பொதிகை மலைக்குச் செல்லும்போது திருப்பெண்ணா கடத்தில் பிறந்த மெய்கண்டாரின் பக்குவ நிலையை அறிந்து, அவருக்குச் சிவதீட்சை செய்து, "மெய்கண்ட சிவம்" என்ற தீட்சா நாமத்தைச் சூட்டி, சிவஞானபோதத்தை விளக்கி உபதேசித்து அருளினார். சிவஞானபோதம் என்றால் சிவஞானம் பற்றிய அறிவு என்பது பொருள். பரஞ்சோதி முனிவரிடம் உபதேசம் பெற்ற மெய்கண்டசிவம் அருளிச் செய்த அரிய தமிழ் நூலின் பெயரும் "சிவஞானபோதம்" என்பதாக அமைந்தது.

சிவஞான போதம் நூல் அளவில் மிகச்சிறியது. ஆயினும் உலக சமய தத்துவ நூல்களில் மிகவும் சிறந்ததாகப் பேரறிஞர்களால் போற்றப்படுகிறது. மேலைநாட்டறிஞரான பேரறிஞர்களால் போற்றப்படுகிறது. மேலைநாட்டறிஞரான ஜோன்பயற் (JohnH.Piet) என்பவர் "உலகில் தர்க்கமுறையில் அமைந்த மிகச்சிறந்த சமய தத்துவ நூல் என இதனைப் போற்றுகிறார். இச்சிறிய நூலுக்குப் பெரியதொரு பேருரை "சிவஞானமாபாடியம்" என்ற பெயரில் சிவஞான முனிவர் என்பவரால் எழுதப்பட்டுள்ளது. தமிழ் நாட்டுப் பிறநாட்டு அறிஞர்களும் ஆய்வாளர்களும் சிவஞானபோதம் குறித்து எழுதிய நூல்கள், கட்டுரைகளும் பலவுண்டு.

ஈராண்டில் சிவஞானம் பெற்ற மெய்கண்ட சிவத்தின் பிறப்பு இறையருளால் நிகழ்ந்தது. அவரின் பெற்றோர் நீண்ட காலம் பிள்ளைப் பேறில்லாமல் வருந்தி, தமது குருவான அருணந்தி சிவம் என்பவரிடம் விண்ணப்பித்தனர். அவர் தமிழ்வேதமாகிய திருமுறைகள் உள்ள ஏட்டில் கயிறு சாத்திப்பார்க்க, சம்பந்தப்பெருமானுடைய "பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோடுள்ள நினைவு ஆயினவே வரம்பெறுவர்" என எழுதப்பட்ட தேவாரம் வெளிப்பட்டது. தமது குருவின் ஆலோசனைப்படி திருவெண்காட்டுத் திருக்கோயில் சென்று அங்குள்ள முக்குளநீரில் மூழ்கி சிவபெருமானை வழிபட்டு வந்தனர். இதன் பேறாக ஒரு குழந்தை பிறந்தது. அக்கோயிலின் இறைவன் பெயராகிய "சுவேதவனப்பெருமாள்" என்ற பெயரை அக்குழந்தைக்குச் சூட்டினர். இக்குழந்தையே இரண்டு வயதில் பரஞ்சோதி முனிவரிடம் உபதேசம் பெற்று மெய்கண்டசிவம் என்ற பெயருடன் ஞானச் சுடராக ஒளி வீசியது.

மெய்கண்டாரின் குருவான பரஞ்சோதி முனிவரின் குரு சத்தியஞானதெரிசனி. இவரின் குரு சனற்குமாரமுனிவர். இவரின் குரு திருநந்திதேவர். கைலாயத்திலிருக்கும் இந்நால்வரும் அகச்சந்தானகுரவர் எனப்படுவர். மெய்கண்டாரும் அவரின் பின்வந்த மூவரும் புறச்சந்தான குரவர் எனப்படுவர். ஆயினும் சந்தான குரவர் என்று சைவத்தில் பொதுவாகக் குறிக்கப்படுபவர் புறச்சந்தான குரவர் நால்வருமே.

மெய்கண்டாரின் சீடரான அருணந்தி சிவாச்சாரியார் அருளிச் செய்த ஒரு நூல் சிவஞான சித்தியார். இது சிவஞான போதத்தில் விரிவாக எழுதப்பட்டது. அதன் வழிநூல் என்று போற்றப்படுவது, பரபக்கம், சுபக்கம் என்று இரு பகுதிகளைக் கொண்டது இந்நூல். அன்றிருந்த பிறதத்துவக் கொள்கைகளைச் சீர்தூக்கி ஆராய்ந்து, அவற்றின் பொருந்தாமையைக் கூறுவது பரபக்கம். சைவசித்தாந்த உண்மைகளை விளக்குவது சுபக்கம். அருணந்தி சிவாச்சாரியார் செய்த இன்னொரு நூல் இருபா இருப∴து என்பதாகும். வேதாகம விற்பன்னராகிய அருணந்தி சிவம் "சகலாகம பண்டிதர்" என்றும் அழைக்கப்படுவர்.

அருணந்தி சிவாசாரியார் மெய்கண்டாரின் பெற்றோருக்குக் குருவாக இருந்தவர். பின்னர் குழந்தை ஞானியான மெய்கண்டாரின் பக்குவநிலையை அறிந்து அவரின் சீடராக ஆனவர். அருணந்தி சிவத்தின் சீடராக இருந்த சந்தான குரவர் மறைஞான சம்பந்தசிவாச்சாரியார். இவர் எந்த நூலையும் எழுதியதாகக் குறிப்பில்லை. இவரின் சிவஞானமுதிர்ச்சியால் ஈர்க்கப்பட்ட ஞானிகள் பலர். அவர்களில் ஒருவர், சந்தானகுரவர் வரிசையில் நான்காவதாக வந்த உமாபதி சிவாச்சாரியார், தில்லைவாழ் அந்தணரில்

ஒருவரான உமாபதிசிவம் தமது தகுதிக்கேற்ப, வழக்கம் போல் பல்லக்கில் விருதுகள் தீவர்த்திகளுடன் பரிவாரங்கள் சூழ்ந்துவர திருவீதியில் வந்தார். இதனைக் கண்ட மறைஞானசம்பந்தர் "பட்ட கட்டையில் பகற்குருடு போதல் பாரீர்" என்று கூறினார். இதனைக் கேட்ட உமாபதி சிவம் பல்லக்கில் இருந்து இறங்கி வந்து மறைஞான சம்பந்தரிடம் விளக்கம் கேட்டார். பட்டகட்டை என்பது பல்லக்கையும் பகல் குருடு என்பது பகல் நேரத்தில் தீவர்த்தியுடன் வரும் தன்னையும் குறிப்பதை உணர்ந்த உமாபதிசிவம், அவரைத் தனது குருவாகக் கொண்டார்.

மறைஞான சம்பந்தரைக் குருவாகக் கொண்டதனால் உமாபதிசிவம் தனது குலவழக்கத்திலிருந்து விலகிவிட்டார் எனக் கருதிய தில்லைவாழ் அந்தணர்கள் அவரைச் சிதம்பரத்திருக்கோயிற் பணிகளிலிருந்து நீக்கினர். இதனால் கொற்றவன் குடி என்ற இடத்தில் ஒரு திருமடம் அமைத்து அங்கே உமாபதிசிவம் சிவப்பணி செய்து வந்தார். இதன் காரணமாக இவர் "கொற்றவன் குடி உமாபதி சிவம்" என்று அழைக்கப்படுதலுமுண்டு.

கொற்றவன் குடியில் உமாபதிசிவம் இருந்த நாட்களில் ஒருநாள் அவர் சிதம்பரத்து நடராசப் பெருமானுக்குப் பூசை செய்யும் முறை நாள் வந்தது. பூசை செய்யவந்த உமாபதி சிவத்தை பிற அந்தணர்கள் முன்னரே தடுத்து நிறுத்திவிட்டார்கள். பூசை செய்வதற்கு அவரைத் தடுத்த அந்தணர் திருக்கோயிலுள் சென்றபோது நடராசர் எழுந்தருளியிருக்கும் பேடகத்தைக் காணவில்லை. அப்பொழுது பூசை செய்யும் முறையாளனாகிய உமாபதி சிவத்தின் இடத்தில் தாம் இருப்பதாக அசரீரி வாக்குக் கேட்டது. அந்தணர்கள் கொற்றவன்குடி சென்று உமாபதி சிவத்திடம் தாம் செய்த பிழையை மன்னித்து, திருக்கோயிலுக்கு வந்து பூசை செய்யும்படி வேண்டினர். அவரும் அங்கு வந்து பூசை செய்தார். இன்னொரு முறை, உமாபதி சிவம் இன்றித் திருக்கோயிற் கொடியை ஏற்ற முடியவில்லை. அவர் அங்கு வந்து நடராசரைத் துதித்து, கொடிக்கவி பாடி கொடியை ஏற்றினார். திருமடத்துத் தொண்டு செய்யும் பெற்றான் சாம்பான் என்ற பணியாளனுக்கு முத்தி கொடுத்தார். அவனின் மனைவிக்கு ஏற்பட்ட ஐயத்தைப் போக்க அரசன் முன்னிலையில் திருமடத்து முள்ளிச் செடிக்கும் முத்தி கொடுத்தார். இத்தகைய அற்புதங்கள் பல செய்த அருளாளர் உமாபதி சிவாச்சாரியார்.

வட மொழியிலும் தமிழ்மொழியிலும் பல நூல்களை உமாபதிசிவம் எழுதினார். பதினான்கு மெய்கண்ட நூல்களில் எட்டு இவரால் எழுதப்பட்டவை. அவற்றில் ஒன்றான "சிவப்பிரகாசம்" நூல் சிவஞானபோதம் நூலின் சார்பு நூல் எனப்போற்றப்படுகிறது. இவரின் பிறநூல்கள், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்ப.்றொடை, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம், கொடிக்கவி என்பன. இந்த எட்டு நூல்களும் சித்தாந்த அட்டகம் எனப்படும். உமாபதிசிவத்தின் சித்தாந்த நூல்களில் காணும் விளக்கங்கள் புதுமை மிக்கவை: ஆயினும் சித்தாந்த மரபில் நிற்பவை. "தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா, நேற்றுத் தோன்றியவை என்பதனால் தீதாகா" என்று தனது சிவப்பிரகாச நூலில் கூறி, தத்துவ உலகில் ஒரு புதிய நோக்கைக் கடைப்பிடித்தவர் உமாபதிசிவம்.

மெய்கண்ட சாத்திர நூல்களில் ஒன்றான "உண்மை விளக்கம்" என்ற நூலின் ஆசிரியர் திருவதிகை மனவாசகங்கடந்தார். இவரும் மெய்கண்டாரின் ஒரு மாணவராவர். திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்ற இரு மெய்கண்ட நூல்கள் சிவஞானபோதத்துக்கு முன்னரே வெளிவந்தவை. இவற்றின் ஆசிரியர்கள் முறையே திருவியலூர் உய்யவந்த தேவநாயனார், திருக்கடவூர் உய்யவந்த தேவநாயனார் ஆகியோர் ஆவர்.

சைவமக்கள் சமயகுரவரை அறிந்தளவுக்கு சந்தான குரவரையும் அறிந்திருப்பது பயனுள்ளது. பிறதத்துவ ஞானிகள் போலல்லாது சைவசமய தத்துவஞானிகள் அனைவரும் இறையருள் பெற்ற அருள்ஞானிகள் என்பது சிந்தனைக்குரியது. பக்தி நூல்களான தேவார திருவாசகம் போன்ற திருமுறைகளை அறிந்து தெளிவதற்கு சித்தாந்த அறிவு இன்றியமையாதது. எமக்கும் இறைவனுக்கும் உள்ள உறவை விளக்கி எமது ஈடேற்றத்துக்கு துணைபுரிவது சைவசித்தாந்த தத்துவம், இத்தத்துவத் துறையில் முக்கிய இடம்வகிக்கும் சந்தான குரவரை அறிந்து போற்றுவது சைவ மக்களுக்கு இன்றியமையாததாகும்.

# சந்தேகம் தெளிதல்

கேள்வி : கோளறு பதிகத்தில் 'ஓன்பதொடொன்றொடேழு பதினெட்டொடாறும் உடனாய நாட்கள் அவைதாம்' என்று வருகிறதே, எண்ணிக்கை எவற்றைக் குறிக்கின்றன? எப்படிக் கணக்கிட்டுப் பார்த்தாலும் விடை தெரியவில்லையே?

பதில் :

**என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க,**
**எருதேறி ஏழை யுடனே**
**பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்**
**உளமே புகுந்தஅதனால்**
**ஒன்பதோ டொன்றொடேழு பதினெட்டொடாறும்**
**உடனாய நாட்கள் அவைதாம்**
**அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியா ரவர்க்கு மிகவே!**

என்று திருஞானசம்பந்தர் அடியார்க்கு எல்லா நாட்களும் கோள்களும் நல்லனவே என்று பாடுகின்றார்.

அப்பர் பெருமான் இப்போது நாளும் கோளும் நன்றல்ல என்றபோது தான் சம்பந்தர் இக்கோளறு பதிகம் பாடினார்.

இன்ன இன்ன நட்சத்திரங்கள் நல்லன அல்ல என்பதை அடியில் வரும் பாடலால் அறிக;

**ஆதிரை பரணி ஆரல் ஆயில்யம்முப் பூரங் கேட்டை**
**தீதறு விசாகம் சோதி சித்திரை மகம்ஈ ராறும்**
**மாதனம் கொண்டார் தாரார் வழிநடைப் பட்டார் மீளார்**
**பாய்தனில் படுத்தார் தேறார் பாம்பின்வாய்த் தேரை தானே.**

திருவாதிரை, பரணி, கார்த்திகை, ஆயிலியம், பூரம், பூரட்டாதி, பூராடம், கேட்டை, விசாகம், சுவாதி, சித்திரை, மகம், என்ற பன்னிரண்டு நட்சத்திரங்கள் நன்மையல்லாதன.
மேலே கூறிய தேவாரத்தில், ஓன்பது, ஒன்று, ஏழு, பதினெட்டு, ஆறு என்ற எண்ணிக்கையிலுள்ள நட்சத்திரங்களைக் கூறுகின்றன.

பழங்காலத்தில் ஆவணி தான் வருடப்பிறப்பு. காரணம் சூரியனுடைய சொந்த வீடு சிம்மம். "காரே கூதிர்" என்று திவாகரம் கூறுகின்றது.அது போல் 'பழங்காலத்தில் கார்த்திகைதான் முதல் நட்சத்திரம் எனவே' கார்த்திகை தொடக்கமாக எண்ணினால்,

| | | |
|---|---|---|
| ஓன்பது | - | பூரம் |
| ஒன்று | - | கார்த்திகை |
| ஏழு | - | ஆயில்யம் |
| பதினெட்டு | - | பூராடம் |
| ஆறு | - | பூரட்டாதி |

உடனாய மற்ற நட்சத்திரங்கள் ஆகா எனப் பொருள்படும்

அன்றி "இப்போது வழக்கத்தில் உள்ளபடி அசுவ நியை முதல் நட்சத்திரமாகக் கொண்டால்,

| | | |
|---|---|---|
| ஓன்பது | - | ஆயில்யம் |
| ஓன்பதொடொன்று (பத்தாவது) | - | மகம் |
| ஓன்பதொடேழு (பதினாறு) | - | விசாகம் |
| பதினெட்டு | - | கேட்டை |
| ஆறு | - | திருவாதிரை |

இந்த நட்சத்திரங்கள் சுபத்துக்கு விலக்கானவை எனப் பொருள்படும்

# நினைவிற் கொள்வதற்கு

பார்த்திப
மார்கழி

| | | | |
|---|---|---|---|
| 01. | 16.12.2005 | வெள்ளி | மாதப் பிறப்பு, விநாயக விரதாரம்பம் |
| 04. | 19.12.2005 | திங்கள் | சங்கடஹர சதுர்த்தி |
| 08. | 23.12.2005 | வெள்ளி | இயற்பகையார் குருபூசை |
| 11. | 26.12.2005 | திங்கள் | மானக்கஞ்சாறர் குருபூசை |
| 13. | 28.12.2005 | புதன் | பிரதோஷ விரதம் |
| 15. | 30.12.2005 | வெள்ளி | அமாவாசை விரதம் |
| 16. | 31.12.2005 | சனி | சாக்கியர் குருபூசை |
| 19. | 03.01.2006 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| 20. | 04.01.2006 | புதன் | உதயத்தின்முன் திருவெம்பாவைப் பூஜாரம்பம் |
| 21. | 05.01.2006 | வியாழன் | விநாயக ஷஷ்டி விரதம் |
| 23. | 07.01.2006 | சனி | வாயிலார் குருபூசை |
| 25. | 09.01.2006 | திங்கள் | கார்த்திகை விரதம் |
| 27. | 11.01.2006 | புதன் | பிரதோஷ விரதம் |
| 28. | 12.01.2006 | வியாழன் | இரவு நடேசர் ஆர்த்திராபிஷேகம் |
| 29. | 13.01.2006 | வெள்ளி | உதயம் நடேசர் ஆர்த்திரா தரிசனம் |
| | | | சடையனார் குருபூசை |

☞ **பிழைதிருத்தம்**

பார்த்திப புரட்டாதி இதழ் பின் அட்டை உட்பக்கத்தில் கார்த்திகை 21. (06.12.2005) செவ்வாய் ஷஷ்டி விரதம் எனக் கொள்க

Registered as a NewsPaper at the G.P.O.

உ
சிவமயம்

# புத்தக விற்பனை

- திருவாதவூரடிகள் புராணம் (ம. க. வேற்பிள்ளை அவர்களின் விருத்தியுரையுடன்)
- விதியை வெல்வது எப்படி?
- திருவாசகம்
- **Understanding Saiva Siddhanta Philosophy.**
- **And Outline of Saivism**
- சைவத்தை அறியுங்கள்
- சிவபுராணம் விளக்கவுரை
- வள்ளுவம் வழங்கும் தமிழ் தத்துவம்
- உயர்வுமிகு சைவசமயம் உடன்பாடற்ற வழிபாடு (பிற அறிஞரின் கட்டுரைகளின் தொகுப்பு)
- தத்துவ உலகில் தடம் பதித்த பண்டிதர் மு.கந்தையா
- ஈழத்துச் சித்த சிரோமணிகள்
- நல்லை ஆதீன முதல்வர் நற்சரிதம்
- சைவபோதம் 1ஆம் புத்தகம்
- சைவபோதம் 2ஆம் புத்தகம்
- சைவ மகத்துவம்
- சைவசமய சாரம்
- கந்தபுராண விளக்கம்
- சிவஞானபோதம் கருத்துரையும் (ஒரு கிறித்தவ ஆய்வாளருக்கான மறுப்புரையும்)
- சுப்பிரமணியப் பெருமானுடைய திருப்பெருவடிவம்
- சைவசமய நெறி (மூலமும் உரையும்)
- சித்தாந்த விளக்கிற் சைவக் கிரியைகள்

**ஆகிய நூல்கள் விற்பனைக்கு உண்டு**

*கிடைக்கும் இடம்:*

**லக்ஷ்மி அச்சகம்**

**195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.**

எங்களிடம்,

ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக் குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச் சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங் கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்து விளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

**கலையரசி**

23/1, விவேகானந்த மேடு,

*கொழும்பு-13. தொ.பே: 2478885*

## சைவநீதி மாத இதழ்

பெறுமதி விபரம்

தனிப் பிரதி ரூபா 25.00

ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில் ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது **US$ 15**

*சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.*

சந்தா அனுப்பவேண்டிய முகவரி

***C. Navaneethakumar,***
*No. 30, Ramya Road,*
*Colombo - 04.*
*Sri Lanka.*
*Tel : 2580458*

Regd No. QD/27/News 2005 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.